சோவியத் வீழ்ச்சிக்குப்பின்
ஐரோப்பிய முற்போக்கு
இடதுசாரிகள்

சோவியத் வீழ்ச்சிக்குப்பின் ஐரோப்பிய முற்போக்கு இடதுசாரிகள்

விளைவுகளும் வாய்ப்புகளும்

மார்செல்லோ முஸ்டோ

தமிழில்: கி. இலக்குவன்

பாரதி புத்தகாலயம்

Sovieth Vizhchikkupin Europia Murpokku Eadathusarigal

Marchello Musto

Translated into Tamil: **Ki. Illakuvan**

First Edition: December, 2016

Published by

BHARATHI PUTHAKALAYAM

7, Elango Salai, Teynampet, Chennai - 600 018
Email: thamizhbooks@gmail.com
www.thamizhbooks.com

சோவியத் வீழ்ச்சிக்குப்பின் ஐரோப்பிய முற்போக்கு இடதுசாரிகள்

மார்செல்லோ முஸ்டோ

தமிழில் : கி. இலக்குவன்

முதல் பதிப்பு: டிசம்பர், 2016

வெளியீடு:

பாரதி புத்தகாலயம்

7, இளங்கோசாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
தொலைபேசி : 044 24332424, 24332924, 24339024

விற்பனை நிலையம்

திருவல்லிக்கேணி: 48, தேரடி தெரு | **பெரம்பூர்:** 52, கூக்ஸ் ரோடு
வடபழனி: பேருந்து நிலையம் எதிரில் அடையார் ஆனந்தபவன் மாடியில்
ஈரோடு: 39, ஸ்டேட் பாங்க் சாலை | **திண்டுக்கல்:** பேருந்து நிலையம்
நாகை: 1, ஆரியபத்திரபிள்ளை தெரு | **திருப்பூர்:** 447, அவினாசி சாலை
திருவாரூர்: 35, நேதாஜி சாலை | **சேலம்:** பாலம் 35, அத்வைத ஆஸ்ரமம் சாலை,
சேலம்: 15, வித்யாலயா சாலை | கரூர்: நாரத கானசபா அருகில் (Near TNGEA - Office)
அருப்புக்கோட்டை: 31, அகமுடையார் மகால் | **நெய்வேலி:** சி.ஐ.டி.யு, அலுவலகம்,
மதுரை: 37A, பெரியார் பேருந்து நிலையம் | **மதுரை:** சர்வோதயா மெயின்ரோடு,
குன்னூர்: N.K.N வணிகவளாகம் பெட்போர்ட் | **சிங்கற்பட்டு:** டி., ஜி.எஸ்.டி சாலை
விழுப்புரம்: 26/1, பவானி தெரு | **திருநெல்வேலி:** 25A, ராஜேந்திரநகர், பாளையங்கோட்டை
விருதுநகர்: 131, கச்சேரி சாலை | **கும்பகோணம்:** ரயில் நிலையம் அருகில்
வேலூர்: S.P. Plaza 264, பேஸ் மிமி , சத்துவாச்சாரி | பேருந்து நிலையம் அருகில்,
தஞ்சாவூர்: காந்திஜி வணிக வளாகம் காந்திஜி சாலை | **விருதாசலம்:** 511A, ஆலடி ரோடு
திருச்சி: வெண்மணி இல்லம், கரூர் புறவழிச்சாலை | **பழனி:** பேருந்து நிலையம்
தேனி: 12,பி, மீனாட்சி அம்மாள் சந்து, இடமால் தெரு | **கோவை:** 77, மசக்காளிபாளையம் ரோடு, பீளமேடு | **தி.மலை:** முத்தம்மாள் நகர், | **நாகர்கோவில்:** 699, கே.பி.ரோடு, ஆர்.வி.புரம், 94434 50111
சிதம்பரம்: 22A/18B தேரடி கடைத் தெரு, கீழவீதி அருகில்

நினைத்த நூல்கள்... நினைத்த நேரத்தில்...
thamizhbooks.com 9498002424

ரூ.50/-
அச்சு : கணபதி எண்டர்பிரைசஸ், சென்னை -600 005

1976இல் பிறந்த மார்செல்லோ முஸ்டோ, கனடாவின் டொரோன்டோ நகரிலுள்ள யோர்க் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் தத்துவம் கற்பிக்கிறார். அவரது நூல்களும் கட்டுரைகளும் உலகம் முழுவதிலும் இருபது மொழிகளில் வெளிவந்துள்ளன. அவர் பதிப்பித்துள்ள, இணையாசிரியராக எழுதியுள்ள, பல்வேறு பதிப்புகளாக அச்சாக்கம் செய்யப்பட்டுள்ள நூல்களில் சில பின்வருமாறு: Karl Marx's 'Grundrisse': Foundations of the Critque of Political Economy 150 Years Later (2008 - Indian edition, New Delhi: Manohar, 2013); Marx for Today and The International after 150 Years: Labour Versus Capital. Then and Now(2015). என்னும் நூலைப் பதிப்பித்துள்ளார். 2011இல் இத்தாலிய மொழியில் முதன்முதலாக வெளிவந்த, Rethinking Marx என்னும் ஆய்வுக் கட்டுரை 2015இல் ஆங்கிலத்தில் வெளிவந்தது.

பதிப்புரை

மகத்தான அக்டோபர் புரட்சியின் நூற்றாண்டு விழாவை நோக்கி உலகெங்கும் நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. மறுபுறம் சோவியத் மற்றும் கிழக்கு ஐரோப்பிய சோசலிச அரசிகளின் வீழ்ச்சி, சோவியத் யூனியன் சீர்குலைவு ஆகியவற்றின் 25ஆம் ஆண்டும் ஆகும். சோவியத் சீர்குலைவின் போது, 'வரலாற்றின் முடிவு' என்றெல்லாம் பண்டிதர்கள் எழுதியதையெல்லாம் பொய்யாக்கி உலகமெங்கும் உழைப்பாளி மக்கள் போராடி வருகின்றனர். வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக் கொண்ட இடதுசாரிகளும் பொதுவுடமைக் கட்சிகளும் புதிய உலக நிலைக்கும், காலத்திற்கும் ஏற்ப தங்களை தகவமைத்துக் கொள்ளும் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர். பூமிப்பந்தின் ஒவ்வொரு பகுதியிலும் நடக்கும் போராட்டங்களும், அமைப்புகளைக் கட்டும் முயற்சிகளும் ஏனைய பகுதிகளில் இந்தப் பெரும்பணியில் ஈடுபடும் இயக்கங்களுக்கும், செயல்பாட்டாளர்களுக்கும் அளப்பரிய பெருமதி கொண்ட அனுபவங்களையும், பாடங்களையும், எச்சரிக்கைகளையும் வழங்க வல்லதாக உள்ளன. அந்த வகையில் பெருமளவுக்கு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ சமூகங்களாகவும், நீண்ட இடதுசாரி இயக்கப் பாரம்பரியங்களையும் கொண்டதாகவும் உள்ள ஐரோப்பிய நாடுகளின் இடதுசாரிகள் நடத்தும் போராட்டங்களும் இந்தியா போன்ற முதலாளித்துவம் மிக வேகமாகவும் மிகவும் பரவலாகவும் வேளாண்மை அரங்கம் உள்ளிட்ட எல்லா அரங்கங்களிலும் காலூன்றி வரும் நாடுகளில் உள்ள இடதுசாரிகள் ஊன்றி கவனிக்க வேண்டியவையாக உள்ளன. அத்தோடு சர்வதேச அரங்கத்தில் வேகமாக மாறிவரும் அரசியல் பொருளாதாரச் சமன்பாடுகளைப் புரிந்து கொள்வதும் அவசியமாயுள்ளது. சர்வதேச அரசியல், பொருளாதாரம், பண்பாடு என சகல துறைகளிலும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாய் விளங்கக்கூடிய ஐரோப்பாவின் சமகால நிலையை அறிந்து கொள்வது இன்றியமையாததாக உள்ளது.

இந்தத் தேவையை ஈடுசெய்வதற்கு மார்செல்லோ முஸ்டோவின் இச்சிறுநூல் மிகவும் உதவிகரமாக இருக்கும் என நம்புகின்றோம். அத்தகைய நூலை எழுதுவதற்கான சகல தகுதிகளையும் படைத்த ஓர் இளம் மார்க்சிய அறிஞர் மார்செல்லோ முஸ்டோ நூலை தமிழில் வெளியிட மகிழ்ச்சியுடன் அனுமதியளித்த தோழர். மார்செல்லோ முஸ்டோ அவர்களுக்கும் நூலை பாரதிபுத்தகாலயத்தின் பதிப்பாய் வெளியிட வலியுறுத்திய தோழர். எஸ்.வி. ராஜதுரை அவர்களுக்கும், பிரதியைச் செம்மையாக்க ஆலோசனைகள் வழங்கிய தோழர் வ.கீதா அவர்களுக்கும் பாரதி புத்தகாலயம் நன்றிகளைக் கூறிக் கொள்கின்றது.

1

‘நடைமுறையில் இருந்துவந்த சோஷலிசத்தின்’ முடிவு

1989 ஆம்ஆண்டில் நிகழ்ந்த பெர்லின் சுவரின் தகர்ப்பானது ஐரோப்பிய அரசியல் வரைபடத்தில் ஒரு ஆழமான மாற்றத்தை ஏற்படுத்தியது. சோவியத் முகாமைச் சேர்ந்த அடக்குமுறையார்ந்த அதிகார வர்க்க ஆட்சிகள் உள்ளாக நொறுங்கிச் சரிந்ததில் நல்ல விளைவொன்று ஏற்பட்டது. “நடைமுறையில் இருந்த சோசலிசத்திலிருந்து கம்யூனிசம் விடுவிக்கப்பட்டதுடன், தொழிலாளர்வர்க்க விடுதலையை நோக்கிய போராட்டத்துக்கான தத்துவமாக அது மீண்டும் விரிவடைந்தது. எனினும் (இந்த அதிகாரவர்க்க ஆட்சிகள் நிலைகொண்டிருந்த நாடுகளின்) அரசியல் கட்டமைப்புகளில் ஏற்பட்ட பேரெழுச்சிகளும் முக்கியமான பொருளாதார மாற்றங்களும் சேர்ந்து முதலாளித்துவ அமைப்புமுறைக்கு மீண்டும் திரும்பக்கூடிய தொடர் நிகழ்முறையைத் தோற்றுவித்தன. இது உலகம் தழுவிய கடும் சமூகரீதியான பின்விளைவுகளை ஏற்படுத்தியது. ஐரோப்பாவில் முதலாளித்துவத்துக்கு எதிரான சக்திகளின் செல்வாக்கு தவிர்க்க முடியாதபடிக்கு கசக்கிப் பிழியப்பட்டு சாரமிழந்து போனது. சமூகப் போராட்டங்களை ஒழுங்கமைவு செய்வதும் அவற்றை முன்னெடுத்துச் செல்வதும் மேலும் மேலும் கடினமானதாயிற்று.1968 க்குப்பிறகு பல தேசிய பண்பாடுகளின் முக்கியத் தளங்களில் தீர்மானம் செய்யும் நிலையில் இருந்த இடதுசாரிகள் ஒட்டுமொத்தமாக கருத்துநிலையளவில் தமது செல்வாக்கை இழந்தனர்.

* ‘முற்போக்கு இடதுசாரிகள்’: ஆங்கிலத்தில் ‘ராடிகல் லெஃப்ட்’ (Radical Left) என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. ஐரோப்பாவில் ‘இடதுசாரிகள்’ எனும் பதம் டோனி பிளேயர் போன்றோர் தலைமையிலான லேபர் கட்சி, ஜெர்மனியின் ‘சமூக ஜனநாயகக் கட்சி’ ஃபிரான்சின் சோசலிஸ்ட் கட்சி போன்ற கட்சிகளைக் குறிப்பதாக உள்ளது. ரேடிகல் லெப்ட் என்பது கம்யூனிஸ்ட் அமைப்புகளையும், டிராட்ஸ்கிய அமைப்புகளையும் குறிப்பதாக உள்ளது. தீவிர இடதுசாரிகள் எனப் பொருள்படும் ‘எக்ஸ்ட்ரீம் லெஃப்ட்’ (Extreme Left) என்ற பதம் மாவோயிஸ்ட்டுகள் உள்ளிட்ட பல குறுங்குழுக்களைக் குறிக்கப்பயன்படுத்தப்படுகின்றது. மொ-பெ.

தேர்தல் களத்திலும் இத்தகைய பின்னடைவு வெளிப்படையாகத் தெரிந்தது. 1980களிலிருந்து யூரோ கம்யூனிசம்[1] என்பதன் அடிப்படையில் ஒன்றுபட்டிருந்த கட்சிகளும் மாஸ்கோவுடன்[2] அன்றைக்கும் பலமான பிணைப்புகளைக் கொண்டிருந்த கட்சிகளும் தாங்கள் மக்கள் மத்தியில் கொண்டிருந்த ஆதரவில் ஒரு பின்னடைவை எதிர்கொண்டனர். சோவியத் ஒன்றியத்தின் தகர்விற்குப் பிறகு இது கடும் வீழ்ச்சியாக மாறியது. 'புதிய இடதுசாரி'க் குழுக்களுக்கும் டிராட்ஸ்கியக் கட்சிகளுக்கும்[3] இதே நிலை ஏற்பட்டது.

இந்த சூழ்நிலையில்தான் ஒரு மறு கட்டுமான கட்டம் துவங்கியது. இன்னமும் எஞ்சியிருந்த முதலாளித்துவ எதிர்ப்பு சக்திகள் மீண்டும் இணைந்ததன் மூலம் பல இடங்களில் புதிய அரசியல் அமைப்புகள் உருவெடுக்கத் தொடங்கின.முந்தைய பத்தாண்டுகளினூடாக வளர்ச்சியடைந்திருந்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கங்கள், பெண்ணிய இயக்கங்கள், சமாதான இயக்கங்கள் ஆகியவற்றோடு பாரம்பரிய இடதுசாரி சக்திகள் புதிய இணைப்புகளை உருவாக்கிக் கொள்வதற்கு இத்ததைய போக்கு உதவியது. 1986ல் ஸ்பெயின் நாட்டில் உருவாக்கப்பட்ட இஸ்க்வீரிடா யுனிடா இந்த விஷயத்தில் முன்னோடியாக இருந்தது. இதேபோன்ற முன்முயற்சிகள் போர்ச்சுக்கல்லிலும் வடிவெடுத்தன அங்கே யூனிட்டரி டெமாக்ரடிக் கூட்டணி (CRU-CDU) 1987ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. டென்மார்க்கில் 1989ஆம் ஆண்டு யூனிடிலிஸ்ட்ஸ்/ரெட்கிரீன்ஸ் என்ற அமைப்பும், பின்லாந்தில் 1990இல் இடதுசாரி கூட்டணியும், 1991இல் இத்தாலியில் கம்யூனிஸ்ட்ரீ பவுண்டேஷன் கட்சியும் (பிஆர்சி), அதே ஆண்டு கிரீஸ் நாட்டில் சினாஸ் பிஸ் மாஸ் (இடதுசாரி இயக்கங்கள், சுற்றுச்சூழல் அமைப்புகளின் கூட்டணி) என்ற அமைப்பும் உருவாயின. இவற்றின் அமைப்பு வடிவங்கள் வேறுபட்டவையாக இருந்தன. இஸ்க் விரிடா யுனிடாவில் இருந்த ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கட்சிகள் தங்களுடைய இருப்பினை தொடர்ந்து பராமரித்து வந்தன; போர்ச்சுக்கல்லில் இயங்கிவந்த யூனிடரி டெமாக்ரடிக் கூட்டணி ஒரு தேர்தல் கூட்டணியாகத்தான் செயல்பட்டது. கம்யூனிஸ்ட் ரீ பவுண்டேஷன் கட்சியும் சினாஸ் பிஸ்மோசும் தமக்கான ஒன்றிணைந்த புதிய அரசியல் தன்னிலையை வடிவமைத்துக் கொண்டன.

(இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும்) பெர்லின் சுவரின் தகர்ப்பிற்கு முன்னர் இருந்த கட்சிகளைப் புதுப்பிக்கும் முயற்சிகள் (மேல்பூச்சான மாற்றங்களை முன்னெடுத்த முயற்சிகள்) சில நாடுகளில் மேற்கொள்ளப்பட்டன. 1989ல் செக் குடியரசு

அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து பொகிமியா, மொரேவிய பகுதிகளுக்கான கம்யூனிஸ்ட் கட்சி (KSCM) அமைக்கப்பட்டதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. 1990ஆம் ஆண்டில் ஜெர்மனியில் டெமாக்ரடிக் சோஷலிசம் (பிடிஎஸ்) கட்சி தோன்றியது. இது 1949 முதல் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் ஆட்சிநடத்திய சோஷலிஸ்ட யூனிட்டி கட்சியைத் தனது வசமாக்கிக் கொண்டது. 1990ல் ஸ்வீடன் நாட்டில் இடதுசாரிக் கட்சி கம்யூனிஸ்ட்டுகள் மேலும் மிதமான நிலைபாடுகளை எடுக்கத் தொடங்கியதுடன் 'கம்யூனிஸ்ட்' என்ற பெயரையே கைவிட்டு விட்டனர்.

2
அரசாங்கத்தில் தோல்விகள்

இந்த புதிய கட்சிகள் தங்களுடைய பெயர்களை மாற்றிக் கொள்ளாத பிற கட்சிகளைப் போலவே தத்தமது நாடுகளின் அரசியல் மேடைகளில் தமக்கான அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளவே செய்தன. 1993ஆம் ஆண்டுக்குப்பிறகு ஏற்படுத்தப்பட்ட மாஸ்டிரிச் உடன்பாட்டின்படி ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையும் புதிய உறுப்பு நாடுகள் பணப்புழக்கம் தொடர்பான கடுமையான விதிகளுக்கு உடன்படவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானதுடன் நவதாராளமயக் கொள்கைகளை ஏற்க வேண்டியவராகினர். இந்த சூழ்நிலையில், மேற்சொன்ன புதிய கட்சிகள் சமூக இயக்கங்களுடனும் முற்போக்குத் தொழிற்சங்க சக்திகளுடனும் இணைந்து தத்தம் நாடுகளில் நவதாராளவாதத்துக்கு எதிராக அதிகரித்து வந்த எதிர்ப்புக்கு பங்களிப்புகளை செய்தன.

1994ஆம் ஆண்டில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் ஐரோப்பிய ஒன்றுபட்ட இடதுசாரிக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. 1995ல் ஸ்கான்டினேவியாவை சேர்ந்த கட்சிகளுடன் இந்த குழு ஏற்படுத்திக் கொண்ட இணைப்பைத் தொடர்ந்து, அது தனது பெயரை (ஐரோப்பிய ஒன்றுபட்ட இடதுசாரி/நோர்டிக் கிரீன் லெப்ட் (ஜியுஈ/என்ஜிஎல்) என்று மாற்றிக் கொண்டது.

1990களின் மத்தியில் நடைபெற்ற வேலைநிறுத்தங்களும் பல நாடுகளில் ஆளும் அரசாங்கங்களுக்கு எதிரான போராட்டங்களினால் இத்தாலியில் பெர்லுஸ்கோனி, டினி அரசுகளுக்கு எதிராகவும், பிரான்சில் ஷூப்பே அரசை எதிர்த்தும், ஸ்பெயினில் கன்சாலஸ், அஸ்நார் ஆகியாரின் ஆட்சிக்கு எதிராகவும் நடந்த மாபெரும் ஆர்ப்பாட்டங்களினால் ஏற்பட்ட எழுச்சியை அடுத்து முற்போக்கு இடதுசாரிப் பிரிவுகளைச் சேர்ந்த சில சக்திகள் ஓரளவுக்கு மிதமான தேர்தல் வெற்றியையும்கூடப் பெற்றன. 1994ம் ஆண்டின் ஐரோப்பிய தேர்தலில் இஸ்க்விர்டா யூனிடா 13.4சதம் வாக்குகளைப் பெற்றது. 1996ஆம் ஆண்டின் தேசியதேர்தல்களில் கம்யூனிஸ்ட் ரீ பவுண்டேஷன் கட்சி 8.5 சதம் வாக்குகளைப் பெற்றது. 1997ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் பிரெஞ்ச் கம்யூனிஸ்ட் கட்சி 10 சதத்துக்கு நெருக்கமான வாக்குகளைப் பெற்றது. மேலும்

இக்கட்சிகள் தங்களுடைய உறுப்பினர் எண்ணிக்கையையும் அதிகரித்துக் கொண்டன என்பதுடன் உள்ளூர் வட்டங்களிலும் பணியிடங்களில் கூடுதலான அளவில் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டன.

(பல நாடுகளின்) இடதுசாரி கட்சிகள் தமது பலத்தை நிலைநிறுத்திக் கொண்ட இந்த காலக்கட்டத்தில், செக் குடியரசு (அதன் கம்யூனிஸ்ட் கட்சியான கேஎஸ்சிஎம்) தவிர ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இந்நாடுகளில் நிறுவப்பட்ட கம்யூனிஸ்ட் சர்வாதிகாரத்தின் தாக்கமும இருப்பும் இடதுசாரி சக்திகளின் மீள்உருவாக்கத்தை தவிர்த்ததுடன் அதற்கு தொடர்ந்து இடையூறுகளையும் ஏற்படுத்தி வருகின்றன.

புதிய நூற்றாண்டு பிறந்தவுடன் நவீன தாராள உலக மயத்துக்கு எதிரான பிரம்மாண்டமான இயக்கம் அரசியல்ரீதியாக பண்முகங்கொண்ட இயக்கம் உலகின் ஒவ்வொரு மூலைக்கும் பரவியது. 1990கள் தொடங்கி சுயமாக அணிதிரட்டப்பட்ட கூட்டு இயக்கங்களும் தொழிற்சங்க அணிகளும், முதலாளித்துவ எதிர்ப்புக் கட்சிகள், அரசுசாரா அமைப்புகள் போன்றவையும் ஜி-8 உச்சி மாநாடு, சர்வதேச நிதியம். உலக வர்த்தக அமைப்பு, ஸ்விட்சர்லாந்து நாட்டின் தேவோஸ் நகரில் கூடிய உலகப் பொருளாதார அமைப்பு ஆகியவற்றுக்கு எதிராக வெகுமக்களின் எதிர்ப்பு இயக்கங்களை ஊக்கப்படுத்தி வருகின்றன. 2001ஆம் ஆண்டில் பிரேசில் நாட்டில் உதயமான உலக சமூக மன்றம் (WSF), ஐரோப்பிய சமூக மன்றம் ஆகியன பல நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்தி வரும் (பொருளாதார, சமூக) கொள்கைகளுக்கு மாறான மாற்றுக் கொள்கைகள் குறித்து விரிவான விவாதங்களுக்கு ஊக்கமளித்து வருகின்றன.

இதற்கிடையே டோனி பிளேயர் தொழிலாளர் கட்சித் தலைவராகவும் (1994) இங்கிலாந்தின் பிரதமராகவும் (1997-2007) வந்ததை அடுத்து சோஷலிஸ்ட் அகிலத்தின் தத்துவத்திலும் திட்டத்திலும் ஆழமான மாற்றம் உருவாவதற்கான சாத்தியப்பாடு உருவானது.[4] பிளெயர் முன்வைத்த (முதலாளித்துவமும் சோசலிமும் அல்லாத) "மூன்றாம் பாதை" என்பது உண்மையில் நவீன தாராளமய மந்திரத்தை பணிவுடன் ஏற்றுக்கொள்வதும், அத்தகைய பணிந்து போதலை "புதிய" கூறுகளை பொருளற்ற வகையில் உயர்த்திப் பிடிப்பதன் மூலம் திரையிட்டு மறைப்பதுமாகும். பிளேயரின் மூன்றாம் வழியை பல நாடுகளை சேர்ந்த சமூக ஜனநாய அரசுகள் கூடுதலாகவும் குறைவாகவும் வெவ்வேறு வடிவங்களிலும்

ஏற்றுக் கொண்டன ஜெர்மனியின் சமூக ஜனநாயகக் கட்சியின் (எஸ்பிடி) தலைவராகவும் ஜெர்மனியின் அதிபராகவும் 1988 முதல் 2005 வரை செயல்பட்ட கெர்ஹார்ட் ஷ்ரோடரின் அரசாங்கம்,[5] 2005 முதல் 2011 வரை போர்த்துக்கல்லின் சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பிரதமரான ஜோஸ் சாக்ரடிஸின் அரசு ஆகியன இதைச் செய்தன. இத்தாலியின் மத்தியஇடது கூட்டணியின் தலைவராகவும் பிரதமராகவும் 1996 முதல் 1998 மற்றும் 2006 முதல் 2008 வரை செயல்பட்ட ரொமனோ பிராடியும் இந்த மூன்றாம் பாதையைப் பின்பற்றியதுடன் பிளேர் வாதிட்ட கருத்துகளை ஏற்று "புதிய பாதை"யை தேடிச் செல்ல வேண்டும் என்ற கருத்தை எதிரொலித்தார்.

2000 ஆண்டில் லிஸ்டன் திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக் கொண்டதனால் கிடைத்த உத்வேகத்தினல் உந்தப்பட்டும், 'எதிர்காலத் தலைமுறையின"ரின் பெயரிலும் (வேலைசெய்யும் உரிமையை இத்லைமுறையினர் இழக்கவிருந்தனர் என்பதுதான் உண்மை) இந்த அரசாங்கங்கள் தொடர்ச்சியான எதிர்நிலை பொருளாதார சீர்திருத்தங்களைக் மேற்கொண்டன. இது ஐரோப்பிய சமூக மாதிரியை மெல்ல மெல்ல அழிக்கவே உதவியது. பொதுநலம் கருதி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கான செலவை வெகுவாக குறைப்பதற்கான முன்னெடுப்பு வேலை துவக்கப்பட்டது. முதலாளிதொழிலாளர் உறவுகள் உறுதித்தன்மையை இழந்ததுடன் மேலும் அபாயத்துக்கு உள்ளாக்கப்பட்டன. தொழிலாளர்களின் உரிமைகளை உத்திரவாதப்படுத்தவல்ல சட்டரீதியான பாதுகாப்புகள் வரம்பிடப்பட்டன. வேலை நிலைமைகளோ மோசமாகிக் கொண்டே போயின. 2006ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டதும் நாசகர விளைவுகளை ஏற்படுத்த வல்லதுமான போல்கீஸ்டன் வழிமுறையை பின்பற்றி சந்தைகளையும் சேவைத் துறையையும் தாராளமயமாக்கும் போக்கும் தொழிலாளர் ஊதியத்தை மட்டுப்படுத்தும் திட்டமும் செயல்படுத்தப்பட்டன. 2010 நிகழ்ச்சி நிரல் என்று அறியப்பட்டதும், அதிலும் குறிப்பாக, ஜெர்மனியில் ஷ்ரோய்டர் கொணர்ந்த 'ஹார்ட்ஸ் IV திட்டம்' என்பதானது இந்த புதிய கொள்கை காட்டிய திசை வழிக்கான மிகவும் உறுதியான ஆதாரமாக அமைந்திருந்தது.

தெற்கு ஐரோப்பாவின் பல நாடுகளில் சேமநல அரசு என்பதன் கூறுகள் கொஞ்சம் கொஞ்சமாக அருகிப் போயின ஓய்வூதியத் திட்டங்களின்மீது தாக்குதல், பேரளவிலான தனியார்மயமாக்க நடவடிக்கைகள், கல்வியைக் கடைச்சரக்காக்குதல், ஆராய்ச்சி, வளர்ச்சிக்காக ஒதுக்கப்படும் நிதியில் கடுமையான வெட்டுகள்,

பயனுள்ள தொழிற் கொள்கைகள் இல்லாத நிலை என்பன போன்றவை நிகழ்ந்தன. கிரீஸ் நாட்டின் கொன்ஸ்டாண்டன் சிமிடிஸ் (1996-2004) தலைமையிலான அரசாங்கம் இத்தாலியின் மாஸ்கிமோடி அலேமா (1998-2009) தலைமையிலான அரசாங்கம், ஸ்பெயினில் ஜோஸ் ஜபாடரோ (2004-2011) தலைமையிலான அரசாங்கம் ஆகியவற்றில் இத்தகைய போக்குகள் வெளிப்படையாகக் காணப்பட்டன.

கிழக்கு ஐரோப்பாவிலும் இதே போன்ற மாற்றங்கள் அரங்கேற்றப்பட்டன. போலந்து நாட்டின் லெஸ்சக் மில்லர் (2001-2004), ஹங்கேரியின் பெஃரன்க் கையுர்ச்சனி (2004-2010) ஆகியோரின் சோஷலிச அரசாங்கங்கள் முழு முனைப்புடன் நவ தாராளவாத கொள்கைகளைப் பின்பற்றின; பொதுநலத்துக்கான அரசாங்கச் செலவுத் திட்டத்தில் வெட்டுகளை ஏற்படுத்தி செயல்பட்டன. இதனால் இந்த அரசாங்கங்கள் தொழிலாளி வர்க்கத்தினர், மிகவும் வறியவர்கள் ஆகியோரிடமிருந்து அன்னியப்பட்டுப் போயின. இது எந்த அளவுக்கு நிகழ்ந்துள்ளது என்பதை இந்த இரண்டு நாடுகளிலும் சோஷலிஸ்ட் அகிலத்தோடு இணைந்துள்ள கட்சிகள் முற்றிலும் ஓரங்கட்டப்பட்ட நிலையில் வைக்கப்பட்டுள்ளதிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தவரை இத்தகைய சமூக ஜனநாயக அரசாங்கங்களுக்கும் அக்காலத்தில் ஆட்சியில் இருந்த பழமைவாதிகளின் அரசாங்கங்களுக்குமிடையே மிகக்குறைவான வேறுபாடுகளையன்றி வேறு எந்த குறிப்பிடத்தக்க வேறுபாட்டையும் காண்பது அரிதாக இருந்தது. சொல்லப்போனால் சமூக ஜனநாயக மற்றும் மைய-இடதுசாரி நிர்வாகங்களின் நிர்வாகங்கள் பலவற்றாலும் நவீன தாராளமயத்திட்டத்தை மிகவும் திறமையான முறையில் நிறைவேற்ற முடிந்தது. இதற்குக் காரணம், இத்தகைய அரசாங்கங்கள் தொழிலாளர் இயக்கத்துக்கு நெருக்கமானவை என்ற தொழிற்சங்கங்களின் பழைய, அடிப்படையற்ற நம்பிக்கைதான். இதனால்தான் அரசாங்க நடவடிக்கைகள் தொழிற்சங்கங்களுக்கு அதிக அளவில் ஏற்புடையவையாக இருந்தன. பணிந்து போகின்ற மற்றும் மோதல்போக்கில்லாத பாதையை தொழிற்சங்கங்கள் பின்பற்றிய காரணத்தினால் அவை காலப்போக்கில் சமுதாயத்தின் மிகவும் பலவீனமான பகுதியின் பிரதிநிதிகள் என்ற நிலையை சிறிதுசிறிதாக இழந்துவிட்டிருந்தன.

அயலுறவுக் கொள்கைகளின் திசைவழியும் கடந்த காலத்துடன் ஒரு தொடர்பின்மையைக் கொண்டதாக இருந்தது. பழைய கம்யூனிஸ்ட்

கட்சியின் வாரிசாகத் தோன்றியிருந்த இத்தாலியின் இடதுசாரி ஜனநாயகவாதிகளின் (டிஎஸ்) தலைமையிலான அரசாங்கம் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இத்தாலி மேற்கொண்ட இரண்டாம் இராணுவ தலையீட்டு நடவடிக்கைக்கு உத்தரவிட்டது. 1999ல் கொசோவோவின் மீது நேட்டோ நடத்திய தாக்குதலுக்கு யுரேனிய ஆயுதங்களைப் பயன்படுத்திய, பிரபலமாக பேசப்பட்ட தாக்குதலுக்கு தனது ஆதரவை அவ்வரசாங்கம் தெரிவித்தது. பேரழிவு ஆயுதங்களை[6] இராக் நாடு வைத்திருப்பதாக, பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்து, ஜார்ஜ் டபிள்யு புஷ்ஷுடன் பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சித் தலைவர்கள் முன்னணியில் நின்று இராக் நாட்டின் "போக்கிரி" அரசாங்கத்துக்கு எதிரான போரில் 2003ல் ஈடுபட்டனர். இந்த இரண்டு மோதல்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா குறுக்கிட்டபோது (இதன் உடன் விளைவாக ஏற்பட்ட பேரிடரில் ஆப்கன் மக்களின் பெரும் பகுதியினர் பாதிக்கப்பட்டனர் என்பதை நினைவில் கொள்க) ஐரோப்பிய சோஷலிசத்தின் எப்பகுதியினரும் இதனை எதிர்த்துக் குரல் எழுப்பவில்லை. அதுமட்டுமின்றி, அமெரிக்காவினால் ஏவப்பட்ட "நீடித்த சுதந்திரத்துக்கான இயக்க"த்துக்கு எதிராகவும் அவை வாய் திறக்கவில்லை.

சோஷலிஸ்ட் கட்சிகள் பல நேரங்களில் சுற்றுச்சூழல் பிரச்சினையை கொள்கைப் பிரகடனங்களுக்கு ஒதுக்கித் தள்ளியிருந்தன. ஆனால் சுற்றுச்சூழல் எதிர்கொள்கின்ற பெரிய பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு உதவும் விதத்தில் அவற்றைப் பயனுள்ள சட்டங்களாக ஆக்குவதற்கு அநேகமாக முயற்சித்ததே இல்லை. பெரும்பாலான பசுமை இயக்கக் கட்சிகள் வேகம் குறைந்து போனதும் இதற்கு உதவி செய்தது. பசுமை இயக்கக் கட்சிகள் இடது, வலது என்ற வேறுபாடின்றி எவரோடும் சேரத் தயாராய் இருந்தன. இதனால் பின் சித்தாந்த வடிவங்களை பூணத்தொடங்கிய அக்கட்சிகள், நிலவிவரும் முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு எதிரான போராட்டத்தைக் கைவிட்டன.

முதலாளித்துவத்தையும் நவீன தாராளமயத்தின் அனைத்துக் கொள்கைகளையும் விமர்சனமின்றி ஏற்றுக்கொள்ளும் விதத்தில் ஐரோப்பிய சமூக ஜனநாயகத்தில் ஏற்பட்ட பிறழல்கள் (சோவியத் கி. ஐரோப்பியச் சீர் குலைவுகள்) ஒன்றை நிரூபித்தன. அதாவது 1989 ஆம் ஆண்டு நிகழ்வுகள் கம்யூனிஸ்ட் முகாமை மட்டுமின்றி அனைத்து சோஷலிச சக்திகளையும் புரட்டிப்போட்டு விட்டன என்பதாகும். ஏனெனில் அவைகளிடம் இருந்து வந்த எல்லா சமூக பொருளாதார சீர்திருத்த ஆவலும் இப்போது காணாமல்

போய்விட்டது என்பதுடன், இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அவைகளை மற்ற கட்சிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் தனி இயல்பாக இருந்துவந்த பொருளாதாரத்தில் அரசுக் குறுக்கீடு என்பதை இப்போது முன்மொழிவதற்கு அவை இனியும் தயாராக இல்லாத நிலைக்குச் சென்றுவிட்டன.

இத்தகைய ஆழமான மாற்றங்களுக்குப் பிறகும் ஐரோப்பிய முற்போக்கு இடதுசாரிகள் சமூக ஜனநாயக சக்திகளுடன் கூட்டணி சேர்ந்துகொண்டன. தீவிர வலதுசாரி அரசாங்கங்கள் வருவதைத் தடுப்பது குறித்த நியாளமான அக்கறை காரணமாக இருக்கலாம். ஏனெனில் அந்த வலதுசாரிகளின் கொள்கைகள் இளம் வயதினர், தொழிலாளர்கள், ஓய்வூதியர்களின் நிலைகளை மேலும் கீழ் நிலைக்குக் கொண்டு செல்லக்கூடியவை. சில நேர்வுகளில் தனிமைப்படுவதைத் தடுப்பதாக இருக்கலாம் அல்லது உத்திபூர்வமான வாக்களிப்பின் விளைவு தங்களுக்கு எதிராக வேலை செய்வதைத் தடுப்பதற்காகவும் இருக்கலாம். இவ்வாறு ஒருசில ஆண்டுகளின் கால இடைவெளியில் இத்தாலியின் கம்யூனிஸ்ட் ரீஃபவுண்டேஷன் கட்சி (1966-98 மற்றும் 2006-8) பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி (1977-2002) ஸ்பெயின் நாட்டின் இஸ்க்விரட்டா யுனிடா (2004-08) நார்வேயின் சோஷலிஸ்ட் கட்சி (2005-13)[7] போன்ற கட்சிகள் அனைத்தும் மைய-இடதுசாரி அரசாங்கங்களை ஆதரித்தன. அல்லது அக்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அந்த நாடுகளின் அரசாங்கங்களில் அமைச்சர்களாகப் பணிபுரிந்தனர். சமீப ஆண்டுகளில் இடது சாரிக் கூட்டணியும் (2011-14) சோஷலிஸ்ட் பீப்பிள்ஸ் பார்ட்டியும் (2011-15) முறையே பின்லாந்து மற்றும் டென்மார்க்கில் அரசாங்கப் பொறுப்புகளை வகித்து வருகின்றன. உள்ளூர் மட்டங்களில் இத்தகைய தேர்வுகள் ஏற்கெனவே தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. கூட்டணிக் கட்சிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் சக்திகளின் கட்சித்திட்டங்களைப் பற்றி எத்தகைய கூரிய கவனமும் செலுத்தப்படாமலே பலநேரங்களில் இவ்வாறு செய்யப்படுகின்றன.[8]

ஐபீரியன் தீபகற்பம் தொடங்கி ரஷ்யா வரை நவீன தாராளமயக் காற்றானது எதிர்ப்பின்றி வீசிவந்தது. அரசாங்க செயல்பாடுகளை சோஷலிச திசைவழியில் வடிவமைக்கும் தகுதிபடைத்த வலுவான சமூக இயக்கங்கள் இல்லாத நிலையும் நிலவிவந்தது. இது முற்போக்கு இடதுசாரிக் கட்சிகளுக்கு எதிர்நிலையான சூழலாக அமைந்திருந்தது என்பதைக் காணமுடியும். மேலும் அவை முக்கியத்துவம் குறைவான (பிரான்ஸ் மற்றும் இத்தாலியை உதாரணமாகக் குறிப்பிடலாம்) அமைச்சர்களாகப் பதவி வகிக்க

வேண்டியிருந்தாலும் அல்லது ஸ்பெயின் நாட்டில் உள்ளதுபோல சிறிய நாடாளுமன்றக் குழுக்களுடன் திருப்தி அடைய வேண்டிய நிலை இருந்தது என்றாலும், ஆளும் ஆதிக்க சக்திகளோடு இந்த இடதுசாரி சக்திகளின் உறவு இவைகளுக்கு மட்டுமீறிய அளவில் சாதகமற்றதாகவே இருந்துவந்தது. நடைமுறைப் பொருளாதார வழிகாட்டுதல்களுக்கு எதிராக கொள்கை எத்தகைய குறிப்பிடத்தக்க சமூக ஆற்றல்களையும், முதலாளித்துவ எதிர்ப்பு இடதுசாரிகளால் கைப்பற்ற முடியவில்லை. அவற்றால் எப்போதாவது பெற முடிந்தது எல்லாம் ஒரு பலவீனமான வலி நிவாரணமருந்து மட்டுமே. பெரும்பாலான நேரங்களில் ஒரு கசப்பு மாத்திரையையே அவை விழுங்க வேண்டியிருந்தது. எத்தகைய நடவடிக்கைகளுக்கு சமரசமற்ற எதிர்ப்பைக் காட்டுவோம் என்று உறுதிமொழி அளித்திருந்தார்களோ அந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு வந்தது. தலைமையிடம் கொண்டிருந்த விமர்சனமற்ற விசுவாசத்தின் அடிப்படையில் தேர்வுசெய்யப்பட்ட நாடாளுமன்ற வாதிகளாலும் உள்ளூர் தலைவர்களாலும் வழிநடத்தப்பட்ட இத்தகைய கட்சிகளை, அவை ஆதரித்த அமைச்சரவையின் கொள்கைகளே விழுங்கி ஏப்பமிட்டு விட்டன. தங்களுடைய சொந்த மக்கள் ஆதரவு அடித்தளத்தில் ஒரு இடைவெளி சிறிதுசிறிதாக ஆனல் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்த வாக்காளர்கள் மத்தியில் நம்பகத்தன்மையையும் ஒப்புதலையும் பாழாக்கும் நிலை ஏற்பட்டது.

எனினும் வாக்குப்பெட்டிகளின் மூலம் கிடைத்த முடிவுகள் அனைத்து இடங்களிலும் பலத்த அடியாக அமைந்து இருந்தன. 2007ஆம் ஆண்டின் பிரெஞ்சு அதிபர் தேர்தலில் பிரெஞ்சு கம்யூனிஸ்டுகள் 2 சதத்துக்குக் குறைவான வாக்குகளையே பெற்றனர். அடுத்த ஆண்டில் இஸ்கயீர்டாயூனிடா 3.8 சதம் வாக்குகளையே பெற்று மண்ணைக் கவ்வியது. இத்தாலியில் அக்குடியரசின் வரலாற்றிலேயே முதன்முறையாக கம்யூனிஸ்டுகள் நாடாளுமன்றத்துக்குள்ளேயே நுழைய முடியவில்லை. இடதுசாரி வானவில் கூட்டணியின் கீழ் போட்டியிட்ட அக்கட்சி மிக மோசமான அளவில் 3.1 சதம் வாக்குகளையே பெற்றது[9]

3

மும்மூர்த்தி சர்வாதிகாரம்

2007ஆம் ஆண்டு அமெரிக்க நாடு தனது வரலாற்றிலேயே மிகவும் மோசமான ஒரு நிதி நெருக்கடியை எதிர்கொண்டது. அது உடனே ஐரோப்பா வரைக்கும் பரவியது. ஒரு பொருளாதார மந்த நிலைக்குத் தள்ளப்பட்டது. அதிகரித்து வந்த பொதுக்கடனானது திவாலாகும் அபாயத்துக்கு இட்டுச்செல்லும் நிலை ஏற்பட்டவுடன், ஐரோப்பிய கமிஷன், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் சர்வதேச நிதியம் ஆகியவை அடங்கிய மும்மூர்த்திகளிடம் கடன் வாங்குவதற்காக பல நாடுகள் செல்ல வேண்டியிருந்தது. கடனைத் திரும்பச் செலுத்த முடியாத அபாயத்தில் சிக்கிய நாடுகள் கடுமையான சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அவற்றுக்குக் கடன் வழங்கப்பட்டது. அந்த சிக்கன நடவடிக்கைகளுடன் ஒப்பிட்டால் 90 களில் கொண்டு வரப்பட்ட மறு சீரமைப்பு நடவடிக்கைகள் மிகவும் சாதாரணமானதாகக் காட்சி அளித்தன. 2008 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பிய ஒன்றியத்தில் 13 ஆபத்திலிருந்து விடுப்புத் திட்டங்கள் அரங்கேற்றப்பட்டன. ஹங்கேரியில் ஒன்று (2008-10); லாட்வியாவில் ஒன்று (2008-11)[10] ருமேனியாவில் மூன்று மேலும் யூரோ ஜோன் எனும் ஐரோப்பிய பிராந்தியத்தில் உள்ள கிரீசில் மூன்று (2010-18) அயர்லாந்தில் ஒன்று (2010-13) போர்ச்சுக்கல்லில் ஒன்று (2011-14) சைப்ரசில் இரண்டு (2011-16) மற்றும் ஸ்பெயினில் ஒன்று (2012-13) ஆகியவையே இந்த விடுவிப்புத் திட்டங்கள்.

'கட்டமைப்பு சீர்திருத்தங்கள்' (Structural Reforms) என்ற சொல்லாடலே கூட ஒரு மொழியியல் அடிப்படையிலான முழுமாற்றத்துக்கு உள்ளாயிற்று. முந்தைய காலங்களில் தொழிலாளர் இயக்கத்தின் மொழியில் சமூகச் சூழல்களில் சிறிது சிறிதான ஆனால் சீரான முன்னேற்றத்தையே அது சுட்டிக்காட்டியது. ஆனால் இப்போது மக்கள் நலஅரசு என்ற கோட்பாடே ஆழமான அழிவை எதிர்கொள்வதற்கு சமமான பொருளையே வழங்கியது. இந்த போலி சீர்திருத்தங்களைக் குறிப்பதற்கான சிறந்த சொல்லாடலாக பின்தள்ளுதல் என்பதே இருக்கும் எனலாம். அவை கடந்த கால சாதனைகள் பலவற்றை ரத்து செய்வதாகவும் 19ஆம் நூற்றாண்டின் பேராசை பிடித்த முதலாளித்துவத்தின் சட்டம் மற்றும் பொருளாதாரச் சூழலை மீண்டும் கொணர்வதாகவும் இருந்தது.

இந்தச் சூழல்தான் ஐரோப்பா இன்னும் மீண்டுவராத மோசமான பொருளாதார மந்தநிலைக்கு அதனைத் தள்ளியது. இது ஐரோப்பா தீராத பணச்சுருக்கத்தோடு மல்லாடும் நிலையை உருவாக்கியுள்ளது. தொழிலாளர்களின் கூலி விகிதம் ஒரு சரிவை எதிர்கொண்ட நிலையில் பொருட்களுக்கான வேண்டலும் வீழ்ச்சியடைந்து விட்டது. இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய காலத்தில் முன்னெப்போதும் காணாத வேலையின்மை விகிதத்தை அது எதிர்கொண்டது. 2007ம் ஆண்டிலிருந்து 2014ஆம் வரையிலான காலத்தில் கிரீஸ் நாட்டின் வேலையின்மை விகிதம் 8.4 சதத்திலிருந்து 26.5 சதமாக உயர்ந்தது. ஸ்பெயின் நாட்டின் வேலையின்மை விகிதம் 8.2 சதத்திலிருந்து 24.5 சதமாக உயர்ந்தது. இத்தாலியின் வேலையின்மை விகிதம் 6.1 சதத்திலிருந்து 12.7 சதமாக அதிகரித்தது. போர்த்துக்கல் நட்டின் வேலையின்மை விகிதம் 9.1 சதத்திலிருந்து 14.1 சதமாக அதிகரித்தது. 2014ஆம் ஆண்டில் இளம் வயதினரின் ஒரு முழு தலைமையினர் மத்தியில் வேலையின்மையானது ஒரு தொற்றுநோய் என்று கூறத்தக்க அளவில் பரவியிருந்தது. வேலையின்மை விகிதம் பிரான்சில் 24.1 சதமாகவும், போர்த்துக்கல்லில் 34.7 சதமாகவும் இத்தாலியில் 42.7 சதமாகவும் கிரீசில் 52.4 சதமாகவும் ஸ்பெயினில் 53.2 சதமாகவும் அதிகரித்தது. இந்த ஐந்து நாடுகளிலிருந்து பத்து லட்சத்திற்கும் மேலான எண்ணிக்கையில் மக்கள் புலம்பெயர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர்களில் பெரும்பாலானோர் சிறந்த கல்வியும் உயர்ந்து பயிற்சியும் பெற்றனர்.[11]

இவ்வாறு வர்க்கப் போராட்டத்தின் புதிய வடிவங்களை நாம் காண்கிறோம். அடித்தட்டு வர்க்கங்களுக்கு எதிராக ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்கள் மிகவும் உறுதியுடன் இப்போராட்டத்தை நடத்திவருகின்றன. ஆனால் அதே நேரத்தில் இப்போராட்டத்தில் தாக்குதலை எதிர்கொள்ளும் வர்க்கங்களின் எதிர்ப்பு மிகவும் பலவீனமாகவும் ஒழுங்கமைக்கப்படாததாகவும் பிளவுபட்டதாகவும் பல நேரங்களில் இருந்துவருகிறது[12] தொழிலாளிகளின் உரிமைகள் மீதான நெருக்குதல்கள் முப்பதாண்டுகளுக்கு முன்னர் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத அளவில் மட்டுமீறிய அளவு கொண்டதாக இருக்கிறது மிகவும் வளர்ச்சியடைந்த முக்கிய முதலாளித்துவப் பகுதிகளிலும் உலகப் பொருளாதாரத்தின் விளிம்பு நிலையில் உள்ள பகுதிகளிலும் இதே நிலைதான் இருந்துவருகிறது. விளிம்புநிலை நாடுகளில் தொழில் நிறுவனங்கள் (அவற்றில் பலவும் பன்னாட்டு நிறுவனங்கள்) தங்களுடைய தொழிலாளர் அணிகளை மட்டுமீறிய வடிவங்களில் சுரண்டி வருகின்றன என்பதுடன், அந்நாடுகளின் விலை மதிக்க முடியாத இயற்கை வளங்களை ஈவிரக்கமற்ற விதத்தில் ஒட்டக் கறந்து வருகின்றன.

இது மிகப்பெரும் அளவிலான ஏற்றத்தாழ்வுகளின் வளர்ச்சிக்கும் பூமிப்பந்தின் செல்வ வளங்களை வசதிபடைத்த நபர்களுக்கு ஆதரவாக மறு பகிர்மானம் செய்வதற்கும் இட்டுச் சென்றுள்ளன. வேலைப் பாதுகாப்பின்மை, தொழிலாளர்கள் மத்தியில் போட்டி, வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் கடைச்சரக்காகுதல், வறிய பிரிவினர் மத்தியில் நடைபெறும் சமூக யுத்தம் ஆகியவற்றால் உந்தப்பட்டு சமூக உறவுகளில் ஆழமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன், மக்களின் அற உணர்வுகளையும் வாழ்க்கையையும் முன்னெப்போதும் காணாத விதங்களில் மாசுபடுத்தியுள்ள, அதிக ஆக்கிரமிப்புத்தன்மை கொண்ட ஒரு புதிய முதலாளித்துவத்துக்கு இட்டுச் சென்றுள்ளது.

அதேநேரத்தில் ஐரோப்பாவின் நெருக்கடியானது விரைவாக உலக அரசியலுக்குப் பரவிவிட்டது. கடந்த 20 ஆண்டுகளில் முடிவு எடுக்கும் அதிகாரங்கள் அரசியல் தளத்திலிருந்து பொருளாதாரத் தளத்திற்கு மேலும் அதிக அளவில் மாற்றப்பட்டு விட்டன. பொருளாதாரம் இப்போது அரசியலின் மீது ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இது மாற்றங்களால் பாதிக்கப்படாத ஒன்றாக, நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிப்பதாகவும் முக்கியத் தேர்வுகள் மக்களின் கட்டுப்பாட்டுக்கு வெளியே இருக்கும் ஒரு தனிஅரங்கமாக சித்தரிக்கப்படுகிறது.

சமீபகாலத்திலேயேகூட அரசியல் நடவடிக்கைக்கான ஒரு களமாக வழக்கமாகக் கருதப்பட்டுவந்த ஒன்றும் கூட தற்போது பொருளாதார போலித் தாக்கீதுகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. அரசியல்அற்ற என்ற தங்களுடைய சித்தாந்த முகமூடியின் பின்னே ஒரு அபாயகரமான சர்வாதிகார வடிவமும், முற்றிலும் பிற்போக்குத்தனமான உள்ளடக்கமும் உண்மையில் முன் வைக்கப்படுகிறது. கவனம் செலுத்தவேண்டிய அடையாளபூர்வமான உதாரணமாக இருப்பது டிஎஸ்சிஜி (Treaty on stability co-ordination and Governance in the Economic and monitary union) உடன்பாடாகும். நிதிநிலைக் கட்டுக்கோப்பு என்று விரிவாக அறியப்பட்டதும் ஐரோப்பிய நாடுகளின் சட்டங்களில் பலவந்தமாக புகுத்தப்பட்ட சமநிலைப்படுத்தப்பட்ட நிதிநிலை அறிக்கைக்கான கடமையினை இது குறிக்கிறது. இதன் பொருள் யாதெனில், ஒவ்வொரு உறுப்பினர் நாடும் இருபதாண்டுகளுக்குள் 1993ஆம் ஆண்டின் மாஸ்டிரிச் உடன்பாட்டின் விதிகளுக்கு ஏற்ப செயல்படுவதாக உறுதிமொழி அளிக்கிறது என்பதாகும். இதன்படி, பொதுக்கடனானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 60 சதத்துக்கு மிகாமல் இருக்கவேண்டும் என்பதாகும்.

உண்மையில் 2014ஆம் ஆண்டின் புள்ளி விபரத்தின்படி ஐரோப்பிய ஒன்றியத்தில் இது தற்போது 92 சதமாக இருந்து வருகிறது. ஜெர்மனியில் 74.4 சதமாகவும், இங்கிலாந்தில் (செக் குடியரசைத்

தவிர்த்துப் பார்த்தால் உடன்படிக்கையில் கையெழுத்திடாத ஒரே நாடு) 89.4 சதமாகவும், பெல்ஜியத்தில் 106.5 சதமாகவும், போர்த்துக்கல்லில் 130.2 சதமாகவும், இத்தாலியில் 132 சதமாகவும், கிரீசில் 177 சதமாகவும் மிக அதிகமாக உள்ளது.

அரசியல் பொருளாதாரக் குறிக்கோள்களின் மீது சுயேச்சையான முடிவுகளை எடுக்க முடியாதபடி தேசிய நாடாளுமன்றங்களைத் தடுக்கும் ஒரு சுவரைக் கட்டுவதின்மூலம் டி எஸ்சி ஜி உடன்பாடானது மிகவும் கடன்பட்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சமூக நிலையைத் தகர்ப்பதற்கு வழிவகுக்கிறது. தற்போது நிலவிவரும் பொருளாதார மந்தநிலையை மேலும் ஆழப்படுத்தும் அபாயத்தையும் ஏற்படுத்துகிறது. பொதுத்தாக்குதலின் ஒரு பகுதியாகவும் ஆங்கிலமொழி பேசும் நாடுகளால் தூண்டப்பட்டும் பிரான்ஸ் நாடு (2007ஆம் ஆண்டிலும்) இத்தாலி நாடு (2011ஆம் ஆண்டிலும்) பொதுச் செலவினை சீரமைப்பதற்காக ஒரு புதிய செலவு மறுபரிசீலனை ஆணையர் பதவியைப் புகுத்தின. அவர்கள் முன்மொழிந்த ஆலோசனைகள், அவற்றின் நோக்கமாக இருந்த வீண் செலவைக் குறைப்பதை மட்டும் செய்யவில்லை. மாறாக, பணிகளின் அளவு மற்றும் தரம் குறைந்து போவதற்கும் இட்டுச்சென்றது.

இந்த செயல் திட்டத்தின் அடுத்த கட்டமாக அமைந்துள்ளது. டிடிஐபி (Transatlandic Trade and Investment Partnership) உடன் பாடாகும். அதாவது அட்லாண்டிக் கடற்கரை நாடுகளின் முதலீட்டுக் கூட்டாளி ஏற்பாடு தொடர்பானதாகும். இந்த உடன்பாடு ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட உடன்பாடாகும். வர்த்தகக் கட்டுப்பாட்டை அகற்றுவது, பொது நலன்களுக்கு மேலாக கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபத்துக்கு முன்னுரிமை அளிப்பது, அதனைத்தொடர்ந்து தொழிலாளர்களுக்கு மேலும் ஊதிய வெட்டு மற்றும் உரிமைகளை குறைப்புக்கு வழிவகுக்கக்கூடிய அழிவுத்தன்மைகொண்ட கீழ்நோக்குப் போட்டியை அதிகரிப்பது ஆகியவற்றுக்கான விபரங்களை இறுதிப்படுத்துவதற்காக மிகவும் ரகசியமான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

விகிதாச்சார தேர்தல் முறைகளிலிருந்து பெரும்பான்மையினருக்கு ஏதோ ஒரு விதமாக பரிசுகளை வழங்குவதை அடிப்படையாகக் கொண்ட பிற முறைகளை நோக்கிய தேர்தல் முறை மாற்றங்களும் நாடாளுமன்ற மேலாண்மைக்கு மாறாக அதிகாரவர்க்க மேலாண்மையைப் பலப்படுத்தும் ஜனநாயக விரோதப்போக்குகளும், ஏற்கெனவே தேசிய நாடாளுமன்றங்களின் பிரதிநிதித்துவத் தன்மையைத் தகர்த்துவிட்டன. ஆனால் நாடாளுமன்றத்திலிருந்து சந்தைக்கும், அதல் சிலர் அதிகாரம் செலுத்தும் நிறுவனங்களுக்கும்,

அண்மைக்காலத்தில் செய்யப்பட்ட அதிகார மாற்றங்கள் நமது காலங்களில் ஜனநாயகத்துக்கு மிக மோசமான தடைகளை ஏற்படுத்தியுள்ளன[13] இன்றைய தினம் முதலாளித்துவமானது பொதுக் கருத்தை எட்டுவது தொடர்பான ஆழமான நெருக்கடியின் நுழைவாயிலில் ஜனநாயகத்துடன் ஒத்துப்போகாத நிலையில் இருக்கிறது.

மறுபுறத்தில் மாஸ்டிரிச் உடன்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டதற்குப் பிறகு நடத்தப்பட்ட சில தேசிய பொதுஜன வாக்கெடுப்புகளில் ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்தும் தொழில்நுட்ப நாடுகளின் தேர்வுகள் வாக்குப்பெட்டியின் மூலம் தோற்கடிக்கப்பட்டுள்ளன. ஐரோப்பாவுக்கான அரசியல்அமைப்புச் சட்டத்தை[14] உருவாக்குவது தொடர்பான உடன்பாடு குறித்த வாக்கெடுப்பில் 2005ல் பிரான்சிலும் நெதர்லாந்திலும் இது நிகழ்ந்தது. லிஸ்பன் உடன்பாடு[15] குறித்து 2008ல் அயர்லாந்தில் இது நிகழ்ந்தது.

பங்குச்சந்தைப் புள்ளிகள், தர மதிப்பீட்டு நிறுவனங்களின் மதிப்பீடுகள், அரசாங்கப் பத்திரங்களுக்கிடையே வசூலைப் பகிர்ந்து கொள்வது போன்றவை நிகழ்காலச் சமுதாயத்தில் பெரும் ஆராதனைப் பொருட்களாகிவிட்டன. அவை மக்களின் விருப்பாற்றலைவிட அதிக மதிப்பினைப் பெற்றுவிட்டன. எனவே மக்கள் திரளுக்கு மிகப்பெரும் தீங்கினை ஏற்படுத்தும் முடிவுகள் சந்தையின் நம்பிக்கையை மீண்டும் பெறுவதற்கு முற்றிலும் தவிர்க்க முடியாதவை என்று பின் வைக்கப்படுகின்றன.

ஆகப்பெரும் அளவில் பொருளாதாரத்துக்கு ஆதரவினை வழங்குவதற்கு அரசியல் தளம் அதிகார தொனியில் ஆணையிடப்படுகிறது. 2008ஆம் ஆண்டில் நெருக்கடி ஏற்பட்டபோது அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் வங்கிகளைக் காப்பாற்றுவதற்காக செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம். மிகவும் அண்மைக்காலத்தில் நிகழ்ந்த முதலாளித்துவ நெருக்கடியின் பேரழிவினை ஏற்படுத்தும் விளைவுகளை சரி செய்வதற்காக மிகப்பெரிய நிதி மூலதனப் பிரதிநிதிகளுக்கு அரசாங்கத் தலையீடு தேவைப்பட்டது. ஆனால் இதற்கு அடிப்படையான காரணங்களாக இருந்த விதிகள் மற்றும் பொருளாதாரத் தேர்வுகள்குறித்து விவாதத்தை மீண்டும் துவக்குவதை அவைகள் உறுதியுடன் நிராகரித்துவிட்டன.

மைய-வலதுசாரி மற்றும் மைய-இடதுசாரி அரசாங்கங்கள் மாறிமாறி வருவதும்கூட அடிப்படையான சமூகப் பொருளாதார திசைவழியை மாற்றுவதற்கு உதவவில்லை. ஏனெனில், அதிகாரத்தை தமது கரங்களில் வைத்திருக்கும் நிர்வாகங்களை அமைப்பது, அவற்றின் இணைப்பாக்கம் மற்றும் நோக்கங்கள் ஆகிய

அனைத்தையும் பொருளாதாரமே மேலும்மேலும் அதிக அளவில் தீர்மானிக்கிறது. கடந்த காலங்களில் குறுகிய தன்னலம் கொண்ட சக்திகளால் அரசாங்கங்களுக்கோ அல்லது அவற்றைக் கட்டுப்படுத்த முனையும் கட்சிகளுக்குப் பெருந்தொகையை அளிப்பதும், வெகுஜன ஊடகங்களை தங்களுக்குப் பணிபுரியும் விதத்தில் வடிவமைப்பதுமே பிரதான காரணியாக இருந்து வந்தன. ஆனால் இருபத்தொன்றாம் நூற்றாண்டிலோ சர்வதேச நிறுவனங்களால் வெளியிடப்படும் கட்டளைகளே முக்கியக் கூறுகளாக இருந்து வருகின்றன.

இப்போது தோன்றியுள்ள தொழில்நுட்ப வல்லுநர் அரசாங்கங்களின் யுகத்தில் இதற்கான மிகத் தெளிவான சான்றுகள் வெளிப்பட்டுள்ளன. 2011 நவம்பர் 11 முதல் 16 வரையிலான ஒரு வாரத்துக்குக் குறைவான காலத்தில் பொருளாதார ஆற்றலின் இரண்டு மேதாவிலாசங்களான லூகாஸ் பாபடெமோஸ் ஐரோப்பிய (2002 முதல் 2010 வரை ஐரோப்பிய மத்திய வங்கியின் துணைத் தலைவர் பதவி வகித்தவர்) மற்றும் மரியோ மான்டி ஆகியவர்கள் தேர்தல்களில் பங்குபெறாமலே முறையே கிரீஸ் மற்றும் இத்தாலியின் பிரதமர்களாக நியமனம் செய்யப்பட்டனர். பாபடெமோஸ் ஏழு மாதங்களுக்கு மட்டுமே பிரதமர் பதவியில் நீடித்தார். அதே நேரத்தில் ஜனநாயகக் கட்சியின் (பிடி) உறுதியான ஆதரவைப் பெற்றிருந்த மான்டி ஒன்றரை ஆண்டுகளுக்கு தாக்குப் பிடித்தார். சிக்கன நடவடிக்கைகளின் மிகப்பெரும் ஆதரவாளர்களாக தங்களை நிலைநாட்டிக் கொண்டிருந்த அவர்கள், கடுமையான செலவின வெட்டுகளையும் மேலும் அதிகமான சமூகவழியிலான தியாகங்களையும் ஒரேநேரத்தில் அறிமுகப்படுத்தினார்கள். குறைந்த காலத்துக்கே ஆயுள்கொண்டதாகவே அவர்களுடைய அனுபவம் அமைந்திருந்தது. கருத்துத் தெரிவிக்கும் வாய்ப்பு வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டவுடனேயே அவர்களுக்கு வழியனுப்பும் விழா நடத்தப்பட்டது. ஆனால் அவர்களுடைய அரசாங்கங்களின் செயல்பாடுகள் பொருளாதார மட்டத்தில் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன. சொல்லப்போனால் அவர்கள் பதவியில் அமர்த்தப்பட்ட விதத்தினால் ஜனநாயகத்துக்கு ஏற்பட்ட காயம் காரணமாக மேலும் கூடுதலான அபாயகர விளைவுகள் ஏற்பட்டிருந்தன.

இந்த ஆண்டுகளில் சோசலிச அகிலத்தின் சில கட்சிகள் இதேபோன்ற விதத்தில் முடிவடைந்த ஒரு பாதையில் நடைபோட்டன. 2008ஆம் ஆண்டு நெருக்கடியானது எந்த அளவுக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்தவல்லது என்பதைத் தெளிவாகக் காட்டிவிட்டது. மேலும் தான் இயற்றிய அமெரிக்க மீட்சி மற்றும் மறுமுதலீடு சட்டம் 2009ன் மூலம் ஒபாமா நிர்வாகம் வேறுஒரு

பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது. ஆனாலும் சோஷலிச அகிலவாதிகள் நவீன தாராளமயத்துக்கு மாற்று இல்லை என்று சித்தாந்த அளவில் நம்பி வந்த நிலையில், மைய வலது சாரிக் கட்சிகளின் குழுவாகிய ஐரோப்பிய மக்கள் கட்சி (ஈபிபி) சக்திகளுடன் கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டனர். பொருளாதாரம் மற்றும் சமுதாயம் குறித்த அதன் அணுகுமுறையின் முக்கியக் கூறுகளை விமரிசனமின்றி ஏற்றுக்கொண்டனர்.

இத்தகைய போக்கின் ஒரு முன்மாதிரியாக ஜெர்மனியின் குரோஸே கூட்டணி அமைந்திருந்தது. 2005 முதல் 2009 வரை, பிறகு 2013 முதல் தற்போதைய காலம் வரையிலும் ஜெர்மனியின் ஏஞ்செலா மெர்க்கல் அதிபராக இருப்பதற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சி செய்துகொண்ட உடன்பாட்டைக் குறிப்பிடலாம். இந்த உடன்பாடானது நடைமுறையில் சுயேச்சையான செயல்பாட்டைக் கைவிடுவதாக அமைந்திருந்தது என்பதைக் காண முடியும். தேசீய ஒற்றுமை தொடர்பான பிற பரிசோதனைகள் தெற்கு ஐரோப்பாவில் நிகழ்ந்துள்ளன. கிரீஸ் நாட்டில் 2012 மற்றும் 2015க்கிடையேயான காலத்தில் பான்ஹெல்லனிக் சோஷலிச இயக்கமும் (PASOK) ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஜனநாயக இடதுசாரிகளும் (DIMAR) புதிய ஜனநாயகக் (என்டி) கட்சியின் பிரதமரான அன்டோனிஸ் சமரஸ் அரசிற்கு தங்கள் ஆதரவினை வழங்கினர். இத்தாலியில் 2013ஆம் ஆண்டு தேர்தல்களுக்குப் பிறகு ஜனநாயகக் கட்சியானது (அதன் துணைச் செயலாளரான என்ரிக்கோ லெட்டாவை பிரதமராகக் கொண்டு) சில்வியே பெர்லுஸ்கோனியின் தலைமையில் அமைந்த மைய வலதுசாரிக் கூட்டணியுடன் (Centre-right people of Liberty Pdk) அரசாங்கத்தில் நுழைந்தது 2014ஆம் ஆண்டில் இளம் நவீன டோனி பிளையர் வார்ப்பான மாட்டியே ரென்சி பதவிக்கு வந்த இன்றைய தினமும் கூட பொறுப்பிலிருக்கும் அரசாங்கத்தை இயங்கச் செய்து வருகிறார். அந்த அரசாங்கத்தில் ஜனநாயகக் கட்சியானது பெர்லுஸ்கோனி இயக்கத்திலிருந்து பிரிந்துவந்த குழுவினால் அமைக்கப்பட்ட புதிய மைய வலதுசாரிக் கட்சியுடன் கூட்டாக செயல்பட்டது. அவற்றுக்கிடையே முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல்முறை மற்றும் அரசியல் அமைப்பு சாசனச் சீர்திருத்தங்கள்குறித்த உடன்பாடும் ஏற்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டில் ஐரோப்பியக் கமிஷனின் தலைவராக ஜீன் கிளாடு ஜங்கர்[16] தேர்வு செய்யப்பட்டதிலிருந்து ஐரோப்பிய மக்கள் கட்சி மற்றும் சோஷலிஸ்டுகள் மற்றும் ஜனநாயகவாதிகளின் (எஸ்&டி) முற்போக்குக் கூட்டணியானது ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதான நிறுவனங்களில் தொடர்ந்து ஆட்சி செய்து வருகிறது.

4

அரசியல் எதிர்ப்பு, மலின அரசியல் மற்றும் தேசியவெறி

2012ஆம் ஆண்டில் பிரான்சில் ஒலாடின் (Hollande's) சோஷலிச அரசாங்கம் உருவானதையடுத்து அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகள்குறித்த அணுகுமுறையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள தீங்குபயக்கும் ஒத்திசைவானது பிரஸ்ஸல்ஸின் தொழில் நுட்பவாதிகளுக்கு எதிராக மக்கள் மத்தியில் எழுந்துவரும் எதிர்ப்புணர்வு ஐரோப்பிய அரசியல் பின்புலத்தில் (1989ஆம் ஆண்டுக்குப் பிறகு) ஒரு இரண்டாவது பெரிய மாற்றம் தோன்றுவதற்கு வழி வகுத்துள்ளது.

கடந்தசில ஆண்டுகளில் 'அரசியல்' என்று கருதப்படுவது எதுவானாலும் அதன்மீது பழைய ஐரோப்பிய பெரு நிலப்பரப்பு முழுவதிலும் ஒரு ஆழமான வெறுப்புணர்வு வளர்ச்சியடைந்துள்ளது. அரசியல் என்பது 1960களிலும் 1970களிலும் பெரும்பாலும் புரிந்து கொள்ளப்பட்டதுபோல சமூக மாற்றத்தின்மீதான ஒரு பற்றுறுதி மற்றும் கூட்டு ஈடுபாடு என்பதற்குப் பதிலாக அதிகாரத்துக்காகவே அதிகாரம் என்ற பொருளைக் கொண்டதாகவே புரிந்து கொள்ளப்படுகிறது. இந்த புதிய நிகழ்வு குறிப்பாக இளைய தலைமுறையினர் மத்தியில் நிலவுகிறது என்றபோதிலும் மற்ற பகுதியினரிடம் இது இல்லை எனக் கூறமுடியாது. இது ஒரு மேலும் பரவலான அக்கறையின்மையையும் சமூகப் போராட்டங்கள் குறைந்துவருவதையும் தூண்டிவிட்டுள்ளது. அதிலும் குறிப்பாக, தொழிற்சங்க இயக்கத்தின் அமைப்புகள் அதிகாரத்திலுள்ளவர்களால் அவர்கள் சார்பானவையாக, அனுமதிக்கப்பட்டுள்ளவை என்று மேலும்மேலும் கருதப்படுவதை இது குறிக்கிறது.

பல நாடுகளிலும் அரசியல் எதிர்ப்பு அலையானது முற்போக்கு இடதுசாரி சக்திகளையும் ஒதுக்கித் தள்ளிவிட்டது. அரசாங்கத்தில் அவர்களின் செயல்பாடு திருப்தியளிக்காததே இதற்கான முக்கியமான காரணமாகும். நிலவிவரும் சூழலுக்கு ஏற்ப அவர்கள் தங்களை மாற்றிக்கொண்டு விட்டதாகவும் அவர்கள் வழக்கமாக எழுப்பிவந்த தீவிரக் கோரிக்கைகளை படிப்படியாக கைவிட்டுவிட்டதாகவும்கூட அவர்களின் மீது குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

ஐரோப்பாவில், அரசியல் சக்திகளின் சமன்பாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஸ்பெயின் மற்றும் கிரீஸ் நாட்டில் சர்வாதிகார ஆட்சிக்காலத்துக்குப் பிறகு நிகழ்ந்ததைப் போல. ஒரு வித இரு கட்சி அமைப்பு முறைகள் வெடித்துக் கிளம்பியுள்ளன. அங்கே தேர்தல் களத்தின் முக்கால் பங்கினை சோஷலிஸ்டுகளும், மைய வலதுசாரி சக்திகளுமே வழக்கமாக ஆதிக்கம் செலுத்தி வந்தன. பல பத்தாண்டுகளாக மைய வலதுசாரி மற்றும் மைய இடதுசாரிகளுக்கிடையே வாக்குகள் பிரிக்கப்பட்டு வந்த பிரான்ஸ் மற்றும் இத்தாலியின் அரசியல் அமைப்புகளும்கூட இதே போக்குகளால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. மேலும் 2009ல் ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று அரசியல் குழுக்களான ஐரோப்பியக் கூட்டணி, தாராளவாதிகள் மற்றும் ஐரோப்பாவுக்கான ஜனநாயக வாதிகளின் (ஏஎல்டிஇ) கூட்டணியும் 2014ல் நடைபெற்ற தேர்தல்களில் தங்கள் பிரதிநிதிகளில் 13 சதத்துக்கு மேலானவர்களை இழந்துள்ளன.

தேர்தல்களில் வாக்களிக்காமை, புதிய மலின அரசியல் (populist) அமைப்புகளின் தோற்றம், தீவிர வலதுசாரி சக்திகளுக்குக் கிடைத்துள்ள பெரும் முன்னேற்றம், சில நேர்வுகளில் நவீன தாராளமயக் கொள்கைகளுக்கு எதிரான ஒரு இடதுசாரி மாற்று பலமடைந்துள்ளது போன்றவற்றால் அரசியல்-தேர்தல் களமானது மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளில் வெளிப்படையாகக் காணப்படுகின்ற உயர் அளவிலான தேர்தல்களில் வாக்களிக்காதவர்களின் எண்ணிக்கையானது பொதுவாக அரசியல் கட்சிகளிலிருந்து விலகியிருக்கும் போக்கு வளர்ந்து வருவதையே காட்டுகிறது. 1997ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் தேர்தல்களில் வாக்களித்தவர்கள் சதவீதம் 67.9ஆக இருந்தது. இது 2013ல் 57.2[17] சதமாகக் குறைந்தது. 1987ல் ஜெர்மனியில் வாக்களித்தோர் சதவீதம் 84.3ஆக இருந்தது. 2013ல் 71.5 சதமாகக் குறைந்தது. இத்தாலியில் 1992ல் 87.3 சதமாக இருந்தது. 2013ல் 72.2 சதமாகக் குறைந்தது. இங்கிலாந்தில் 1992ல் 77 சதமாக இருந்தது. 2015ல் 66.1 சதமாகக் குறைந்தது. போர்த்துக்கல்லில் 1987ல் 71.5 சதமாக இருந்தது. 2015ல் 59 சதமாகக் குறைந்தது. கிரீஸ் நாட்டில் 2004ஆம் ஆண்டு தேர்தல்களில் 76.6 சதமாக இருந்தது. 2015ல் 56.5 சதமாகக் குறைந்தது. 1995ல் போலந்து நாட்டில் (அதிபர் தேர்தலில்) 64.7 சதமாக இருந்தது. 2015ல் 48.9 சதமாகக் குறைந்தது.

ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தல்களில் பங்கேற்பதும்கூட வீழ்ச்சியடைந்துள்ளது. 1979ஆம் ஆண்டில் 62 சதத்தினர் வாக்களித்ததையும், மிகவும் அண்மைக்காலத் தேர்தல்களில்[18] வாக்களித்துள்ள 42.6 சதத்தினரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இதனைப் புரிந்துகொள்ளலாம். மேலும் மேலும் தொழில்நுட்பத் தன்மை கொண்டதாகவும் மேலும் மேலும் குறைவான அளவில் ஐரோப்பாவுக்கான அரசியல் மாதிரியாகவும் அமைந்துள்ள ஒரு நிறுவனத்தின்மீதான ஈடுபாடு குறைந்துள்ளதையே இது பிரதிபலிக்கிறது. தற்போது நிலவி வரும் ஊழல் அமைப்பு முறைக்கு எதிரான பொதுவான கண்டனம் அல்லது அரசியல் கட்சிகளின் வழக்கமான நடைமுறையுடன் வேறுபட்டவிதத்தில் கீழணிகளின் அரசியல் பங்கேற்பை உத்தரவாதப்படுத்தும் இணையவழி ஜனநாயகம் என்ற மாயையின் வழிகாட்டுதலால் ஐரோப்பிய ஒன்றிய எதிர்ப்பு அலையின்மீது சவாரி செய்துவருகின்ற புதிய பின்சித்தாந்த இயக்கங்கள் அண்மை ஆண்டுகளில் தோன்றியுள்ளன.

இக்கொள்கைகளின் அடிப்படையில் 2006ஆம் ஆண்டில் ஸ்வீடன் மற்றும் ஜெர்மனியில் ஒரே நேரத்தில் பைரேட் பார்ட்டி என்ற பெயரில் கட்சி ஒன்று அமைக்கப்பட்டது. மூன்றாண்டுகளுக்குப் பிறகு ஸ்வீடிஷ் யூரோவுக்கு நடைபெற்ற தேர்தலில் அது 71 சதம் வாக்குகளையும், நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் 2 சதம் வாக்குகளையும் பெற்றது. 2012ஆம் ஆண்டில் இக்கட்சி ஐஸ்லாந்திலும் அமைக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் அங்கு நடைபெற்ற தேர்தல் அதற்கு 5 சதம் வாக்குகள் கிடைத்தன. பைரேட் கட்சியின் வரம்புக்குட்பட்ட அரசியல் திட்டத்தைக் கருத்தில் கொண்டு பரிசீலித்தோம் எனில் இவையெல்லாம் குறிப்பிடத்தக்க சதவீதங்களாகும். ஆனால் நகைச்சுவை நடிகர் பெப்பே கிரில்லோவினால் 2009 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஐந்து நட்சத்திர இயக்கத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தோமானால், இது மிகச் சிறிய அளவாகும். கட்சி உருவாக்கப்பட்டபின் நடந்த இத்தாலியின் முதல் பொதுத்தேர்தலில் 25.5 சதம் வாக்குகளைப் பெற்ற அந்தக் கட்சி இத்தாலியின் முதல் அரசியல் சக்தி ஆயிற்று என்பதைக் குறிப்பிடவேண்டும்.

2013ஆம் ஆண்டில் ஆல்டர்னேடிவ் பார் ஜெர்மனி (AFD) பெர்லினில் அமைக்கப்பட்டது. யூரோ மீது நம்பிக்கையின்மை பெருமளவில் வளர்ந்ததையடுத்து 2013ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டாட்சிக்கான தேர்தல்களில் அக்கட்சிக்கு 47 சதமும், அடுத்த ஆண்டு நடைபெற்ற யூரோ தேர்தல்களில் 7 சதம் வாக்குகளும், 2016 மார்ச் மாதத்தில் நடைபெற்ற மாநிலத் தேர்தல்களில் 12 முதல்

24 சதம் வரையிலான வாக்குகளும் கிடைத்தன. 2014 ஆண்டில் கிரீஸ் நாட்டில் 'தி ரிவர்' கட்சியின் பக்கம் கவனம் திரும்பியது. அடுத்த ஐரோப்பிய தேர்தல்களிலும் தேசிய தேர்தல்களிலும் முறையே 6.6 சதம் மற்றும் 4.1 சதம் வாக்குகளை அக்கட்சி பெற்றது. இதற்கிடையே 2006ஆம் ஆண்டில் கடலோனியாவில் அமைக்கப்பட்ட சியுடடனோஸ் கட்சியானது யூரோ தேர்தல்களில் 3.2 சதம் வாக்குகளையும் 2015ஆம் ஆண்டின் உள்ளாட்சித் தேர்தல்களில் 6.6 சதமும் பெற்றது. 2015 டிசம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் அதன் வாக்கு சதவீதம் இரண்டு மடங்கு அதிகரித்து 13.9 சதமாக உயர்ந்தது. இறுதியாக, போலந்தில் அண்மையில் நடைபெற்ற அதிபர் தேர்தல்களில் வலது சாரியும் புகழ்பெற்ற பாடகருமான பாவெல் குக்கிஸ் 21.3 சதம் வாக்குகளைப் பெற்றார். அவரது இயக்கமான குக்கிஸ் 15 2015 அக்டோபரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் 8.8 சதம் வாக்குகளைப் பெற்று 'நாட்டின் மூன்றாவது அரசியல் சக்தி' என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது.

இக்காலத்தில் ஏற்கெனவே இயங்கிவரும் பல அமைப்புகள் இதேபோன்ற அரசியல்திட்டத்தின் அடிப்படையில் தங்களுடைய இருப்பை அதிகரித்துக் கொண்டுள்ளன. இதற்கு ஒரு மிகவும் குறிப்பிடத்தக்க உதாரணமாக யுனைடட் கிங்டம் இன்டிபென்டெஸ் கட்சியைக் குறிப்பிடலாம். இக் கட்சியானது ஜனரஞ்சக கோரிக்கைகள், தேசிய உணர்வு மற்றும் வெளிநாட்டாருக்கு எதிரான வெறிச்கூச்சல் ஆகியவற்றை இணைத்து தேர்தல்களில் போட்டியிட்டது. 2014ம் ஆண்டில் யூரோ தேர்தல்களில் இது முதல் இடத்தைப் பிடித்தது (26.6 சதம்)2015 மே மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் 12.6 சதம் வாக்குகளைப் பெற்றது. ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் யுனைடட் கிங்டம் இன்டிபென்டென்ஸ் கட்சி உறுப்பினர்களும் ஐந்து நட்சத்திர இயக்க உறுப்பினர்களும் இணைந்து சுதந்திரம் மற்றும் நேரடி ஜனநாயகத்துக்கான ஐரோப்பா என்ற பெயரில் ஒரு புதிய குழுவை அமைத்துள்ளன.

ஸ்விட்சர்லாந்தில் ஸ்விஸ்மக்கள் கட்சியும் மைய ஜனநாயக ஒன்றியம் கட்சியும் இணைந்து 2015ம் ஆண்டின் மிகச் சிறந்த தேர்தல் முடிவைப் பெற்றன. அக்டோபர் தேர்தல்களில் அவற்றுக்கு 29.4 சதம் வாக்குகள் கிடைத்தன. அதன் பெயரின்படி வேறு விதமாகத் தோற்றமளித்தாலும் உண்மையில் அது ஒரு அயலார் எதிர்ப்புணர்வு கொண்ட தீவிர வலதுசாரி அமைப்பாகும். புதிய மசூதிக் கோபுரங்களைக் கட்டுவதற்கு தடைவிதிக்கும் முடிவை எடுப்பதற்காக ஒரு பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை அது கடந்த காலத்தில் எழுப்பி வந்துள்ளதன் மூலம்

ஒரு தனிச் சிறப்பைப் பெற்ற அமைப்பாக அது இருந்தது (2009 ஆண்டில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது)

பொருளாதார நெருக்கடிகளின் விளைவுகள் அறியப்பட்ட பின்னணியில் அயலார் எதிர்ப்பு மற்றும் தேசிய உணர்வு அடிப்படையிலான அல்லது வெளிப்படையான நவீன பாசிசக் கட்சிகள் பல ஐரோப்பிய நாடுகளில் பெரும் முன்னேற்றத்தை எட்டியுள்ளன. சில நேர்வுகளில் அவை தங்கள் அரசியல்மொழியை பாரம்பரியமான வலது பிரிவினையின் அடிப்படையில் மாற்றி அமைத்துக் கொண்டு நிகழ்கால சமுதாயத்துக்குப் பொருத்தமான புதிய போராட்டத் திட்டங்களுடன் செயல்பட்டுவருகின்றன. இதனை 'உச்சத்தில் இருப்பவர்களுக்கும் பாதாளத்தில் இருப்பவர்களுக்குமிடையோன ஒரு மோதல்'[19] என்று மாரின்-லே பென் குறிப்பிடுகிறார். இந்த புதிய இருதுருவ பிளவுவாத அரசியலில் அதிகார வர்க்கத்துக்கு எதிரான, மக்களுக்கான சார்பாளர்களாக (அல்லது அரசாங்கத்தில் மாறி மாறி பொறுப்பு வகிக்கும் சக்திகளுக்கு எதிராக) மக்கள் நலன்களுக்காக இந்த தீவிர வலதுசாரி வேட்பாளர்கள் செயல்படுகிறார்களாம். அத்துடன் சர்வ வல்லமை படைத்த சுதந்திரச் சந்தையை ஆதரித்துவரும் மேல்தட்டுப் பிரிவினருக்கும் இவர்கள் எதிரானவர்களாம்.

இத்தகைய அரசியல் இயக்கங்களின் அரசியல் முகத்தோற்றமும்கூட மாற்றமடைந்துள்ளன. இனவெறிப் பகுதி பலநேரங்களில் பின்னுக்குத் தள்ளப்பட்டு, பொருளாதாரப் பிரச்சனைகள் முன்னுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. தோலின் நிறம் அல்லது மதச் சார்பு ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாட்டைவிடக் கூடுதலான அளவில் ஏழைகள் மத்தியில் நடைபெறும் போராட்டத்தைப் பற்றி அதிகம் பேசுவதன்மூலம் ஐரோப்பிய ஒன்றிய புலம் பெயர்தல் கொள்கைகளுக்கு எதிரான கண் மூடித்தனமான தடை ஏற்படுத்தும் தன்மை கொண்ட எதிர்ப்பானது. அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறது. உயரிய அளவிலான வேலையின்மை மற்றும் மோசமான சமூகமோதலின் பின்புலத்தில் அயல்நாட்டவருக்கு எதிரான வெறிக்கூச்சலானது பிரச்சாரத்தின்மூலம் எழுப்பப்பட்டு வருகிறது. உள்ளூர்த் தொழிலாளர்களின் வேலைகளை புலம்பெயர்வோர் பறித்துக்கொள்கின்றனர். எனவே வேலைகள், சமூகப் பணித்துறைகள் மற்றும் மக்கள்நலப் பயன்பாடுகளில் உள்ளூர்த் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது[20]

இத்தகைய பாதை மாற்றங்கள் மாரின் லே பென் தலைமையிலான ஃபிரன்ட் நேஷனல் பெற்ற அண்மைக்கால வெற்றிகளில்

குறிப்பிடத்தக்க விதத்தில் பங்காற்றியுள்ளன. 2012 அதிபர் தேர்தல்களில் இந்தக் கட்சியானது 17.9 சதம் வாக்குகளைப் பெற்றது. 2014ஆம் ஆண்டின் யூரோ தேர்தல்களில் 24.8 சதம் வாக்குகளைப் பெற்று மிகப்பெரிய பிரெஞ்சு அரசியல் கட்சி என்ற நிலையை எட்டியுள்ளது. 2015 மார்ச் மாதத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் 25.2 சதம் வாக்குகளைப் பெற்றுள்ளது. 2015 டிசம்பரில் நடைபெற்ற மண்டலத் தேர்தல்களில் எந்தவொரு மண்டல அரசாங்கத்தையும் கைப்பற்ற முடியவில்லை என்ற போதிலும் 27.7 சத வாக்குகளைப் பெற்றுள்ளன[21]. இத்தாலியில் நார்த் லீகும் ஒரு வளர்சிதை மாற்றத்தை அடைந்துள்ளது. படானியாவின் (வடக்கு இத்தாலியை அக்கட்சி இவ்வாறு அழைத்துவருகிறது) சுதந்திரக்கோரிக்கையை 1989இல் எழுப்பியதையடுத்து இக்கட்சி உதயமாயிற்று. 1996க்குப் பிறகு இந்த மண்டலம் தன்னிச்சையாகப் பிரிந்துபோவதை தனது லட்சியமாக்கிக் கொண்டது. ஆனால் அண்மையில் அது ஒரு தேசியக்கட்சியாக தன்னை மாற்றிக் கொண்டுள்ளது. அதன் யூரோ அல்லது புலம் பெயர்தலுக்கு எதிரான மேடையானது ஒரு கூட்டணியின் அச்சாணியாக இருந்து வருகிறது. இதன் பிரதான சக்திகள் பாசிசப் பாரம்பரியத்திலிருந்து உருவானவை. இதன் விளைவாக இதன் தேர்தல் வெற்றி பெரும் ஆடம்பரமான விதத்தில் அரங்கேறியுள்ளது. அது தற்போது சில்வியோ பெர்லுஸ்கோனியின் ஃபோர்சா இத்தாலியாவை பின்னுக்குத் தள்ளிவிட்டு இத்தாலியின் மைய வலதுசாரி அமைப்புகளிலேயே ஆகப்பெரிய அமைப்பு என்ற நிலையை எட்டியுள்ளது.

பிரான்ஸ் மற்றும் இத்தாலி ஆகிய இரண்டு நாடுகளிலும் சில வரலாற்றுச் சிறப்பு மிக்க தொழிலாளி வர்க்கக் கோட்டைகளும் கம்யூனிச வாக்குகளும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு கட்சிகளின் நிலையான தேர்தல் அடித்தளங்களாக மாறியுள்ளன. ஃபிரன்ட் நேஷனல் மற்றும் நார்த் லீகுக்கிடையேயான ஒரு கூட்டணி ஒப்பந்தமானது 2015ஆம் ஆண்டில் பிரஸ்ஸலின் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் ஈஎன்எல் (Europe of Nations and Freedom) என்ற அமைப்பு உருவாவதற்கு இட்டுச் சென்றுள்ளது. இதில் நீண்டகாலமாக இயங்கிவரும் அரசியல் கட்சிகளும் சேர்ந்துள்ளன. இது, சில சிறிய அமைப்புகளுடன் இணைந்து சில காலமாக யூரோவிலிருந்து வெளியேறவேண்டும். 'புலம் பெயர்தல் தொடர்பான உடன்பாடுகள் மாற்றியமைக்கப்படவேண்டும்.' தேசிய இறையாண்மைக்கு மீண்டும் திரும்ப வேண்டும் என்று கோரி வருகின்றது. இந்த அம்சத்தில் மிகவும் மக்கள் ஆதரவுத் தளம் கொண்ட கட்சிகளில் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த

ஃபிளெமிஷ் இன்டரஸ்ட் (VB) மற்றும் ஆஸ்திரிய சுதந்திரக் கட்சி 2013 தேசிய தேர்தல்களில் 20.5 சதம் வாக்குகளையும் 2014ஆம் ஆண்டின் ஐரோப்பிய தேர்தல்களில் 19.7 சதம் வாக்குகளையும் 2015ன் வியன்னிஸ் தேர்தல்களில் 30.8 சதம் வாக்குகளையும் 2016 ஏப்ரலில் நடைபெற்ற அதிபர் தேர்தல்களின் முதல் சுற்றில் 35.1 சதம் வாக்குகளையும் பெற்றுள்ளது. நெதர்லாந்தின் 2006ல் அமைக்கப்பட்ட சுதந்திரத்துக்கான கட்சி (Party for freedom) கடந்த ஐரோப்பியத் தேர்தல்களில் 13.3 சதம் வாக்குகளைப் பெற்றுள்ளது. கடைசியாகக் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு கட்சிகளும் தங்கள் நாடுகளின் தேசிய அரசியலில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளன.

தீவிர வலதுசாரி சக்திகள் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களில் இணைந்துள்ளன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு முதல்முறையாக ஐரோப்பியப் பெருநிலப்பரப்பில் பல்வேறு பகுதிகளில் முக்கியமான முன்னேற்றங்களை இவை பெற்றுள்ளன. உதாரணமாக, ஒவ்வொரு ஸ்கான்டினேவிய நாட்டிலும் அவை தன்னை நிலைநிறுத்திக்கொண்ட நடைமுறை எதார்த்தமாகி விட்டன. அவற்றின் தேர்தல் வெற்றிகளால் தூண்டப்பட்டுள்ள சமூகத்தின் சித்தாந்த ரீதியான திசை மாற்றத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டியதில்லை. 'நார்டிக் மாதிரி', இன் அதிஅற்புத ஸ்வீடனில் தாயகமான ஸ்வீடிஷ் ஜனநாயகவாதிகள் கட்சியானது மூன்றாவது ஆகப்பெரிய அரசியல் சக்தியாக உருவெடுத்துள்ளது. இது நவீன நாஜிக் குழுக்களின் சங்கமத்தினால் 1988ல் உருவாயிற்று. இது தற்போது ஐரோப்பாவின் யுகேஐபி (UKIP)யுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. டென்மார்க் மற்றும் பின்லாந்தில் 1995ல் உருவானவையும் ஐரோப்பிய பழமைவாத மற்றும் சீர்திருத்தக் குழுக்களுடன் இணைப்பினைக் கொண்டுள்ளவையுமான இரண்டு கட்சிகள் மேலே குறிப்பிடப்பட்டவைகளையும் விட கூடுதலான அளவில் வியப்பளிக்கும் முடிவுகளை பதிவு செய்துள்ளன. அவை தங்களுடைய நாடுகளில் இரண்டாவது ஆகப்பெரிய கட்சிகளாக வளர்ச்சி பெற்றுள்ளன. அனைவர் மத்தியிலும் பிரமிப்பை ஏற்படுத்தும் விதத்தில் டேனிஷ் பீப்பிள்ஸ் கட்சியானது கடந்த ஐரோப்பியத் தேர்தல்களில் மிகவும் அதிகமான வாக்குகளை, அதாவது மொத்த வாக்குகளில் 26.6 சதத்தைப் பெற்றுள்ளது. 2015 சட்டமன்றத் தேர்தல்களில் 21.1 சதம் வாக்குகளைப் பெற்றதன்மூலம் தனது வெற்றியை மேலும் உறுதிப்படுத்திக் கொண்டதுடன் அரசாங்கப் பெரும்பான்மையுடன் இணைந்து கொண்டது. பின்லாந்தில் ட்ரூ பின்ஸ் கட்சியும், 2015 தேர்தல்களில் 17.6 சதம் வாக்குகளைப் பெற்று தற்போது அரசில் அமர்ந்துள்ளது.

இறுதியாக நார்வே நாட்டில் 2009 தேர்தலில் ஏற்கெனவே 22.9 சதம் வாக்குகளைப் பெற்ற முன்னேற்றக் கட்சியானது தற்போது 16.3 சதம் வாக்குகளைப் பெற்று முதன் முறையாக அரசாங்கத்தில் நுழைந்துள்ளது. இதுவும் முன்னர் குறிப்பிடப்பட்ட கட்சியைப் போலவே சம அளவில் பிற்போக்கானது.

தொழிலாளர் இயக்க அமைப்புகள் நீண்டகாலமாக மறுக்க முடியாத மேலாதிக்கத்தைச் செலுத்தி வந்த ஒரு பகுதியில் இத்தகைய கட்சிகள் ஒரே சீரான விதத்தில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டதற்குக் காரணமாக ஒன்றைக் குறிப்பிடலாம். சமூக ஜனநாயகவாதிகள் மற்றும் கம்யூனிஸ்டுகளுக்கும் நெருக்கமானவையாக இருந்த போர்க்களங்களையும் பிரச்சனைகளையும் இவை எடுத்துக்கொண்டதைக் குறிப்பிடலாம். இன்னும் இரண்டு முக்கியமான காரணிகளை - இவை அடிப்படையானவையாக இல்லாமல் இருக்கலாம் -அதாவது அவற்றால் கவனமாக வடிவமைக்கப்பட்ட அரசியல் அடையாளங்களைக் குறிப்பிடலாம். உதாரணமாக, பாசிச இயக்கங்கள் மத்தியில் பொதுவாக இருந்த தீக்கிரணங்களின் இடத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய தேசீய வண்ணங்களில் அமைந்த காட்டுப்பூவினை ஸ்வீடிஷ் ஜனநாயகவாதிகள் தேர்வு செய்து கொண்டனர். மற்ற காரணியாக ஊடகங்களுடன் திறம்பட உரையாடும் வல்லமைபெற்ற இளம் தலைவர்கள் தோன்றியதைக் குறிப்பிடலாம்.

பாரம்பரிய பிற்போக்குத்தனக் கருவிகளான உலகமயத்துக்கு எதிரான இயக்கங்களை மட்டுமின்றி, அடைக்கலம் கோரி புதிதாக வருபவர்கள் மற்றும் சமுதாயம் இஸ்லாமியமயமாவதான மாயத்தோற்றம் ஆகியவற்றையும் பயன்படுத்துவதன்மூலம் வலதுசாரிகள் புதிய வெற்றிகளைப் பெற்றுள்ளனர். அனைத்துக்கும் மேலாக சமூக ஜனநாயகவாதிகள் அரசாங்கச் செலவை வெட்டிக்குறைக்க வேண்டும் என்பதற்கு ஆதரவாகவும், தீவிர இடதுசாரிகள் அரசாங்கத்தை ஆதரிப்பது அல்லது அதில் நேரடியாகப் பங்கேற்பது போன்ற காரணங்களால் வாய்திறக்க முடியாத நிலையில் இருந்த ஒருகாலத்தில் இடதுசாரிகளுடன் பாரம்பரியமாக தொடர்புகொண்ட சமூகக் கோரிக்கைகளை அவைகள் எழுப்பிவந்தன. எனினும் வலதுசாரிகளின் மக்கள்நலக் கொள்கை என்பது, ஒரு வேறுபட்ட விதத்திலானது. அனைவருக்கும் பொருந்தக்கூடியதோ, அனைவரையும் உள்ளடக்கியதோ மற்றும் மக்களை ஒன்றுபடுத்தும் தன்மை கொண்டதோ அல்ல. சில கோட்பாட்டாளர்கள் குறிப்பிடுள்ளதைப் போல மக்கள் நல தேசியம் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.

வேறுவிதமாகக் குறிப்பிட்டால் ஏற்கெனவே இருந்துவரும் தேசிய சமூகத்தின் உறுப்பினர்களுக்கு மட்டுமே உரிமைகளையும் பணிகளையும் வழங்கக்கூடியது.

பல நேரங்களில் மக்களின் இடப்பெயர்வால் காலியாகி வருவதும் பொருளாதார நெருக்கடியின் பாதிப்பினால் உயர் அளவில் வேலையின்மையை எதிர்கொண்டு வருவதுமாகிய கிராமப்புறங்கள் மற்றும் மாகாணங்களில் விரிவான ஆதரவைப் பெற்று வருகின்றன. அதுமட்டுமின்றி, 'அந்நியர்' குடியேருவதை அனுபமதிப்பது அல்லது 'மக்கள் நல அரசு' ஆகிய இரண்டில் ஒன்றுதான் சாத்தியம் என்ற அச்சுறுத்தலுக்கு அடிபணிந்த கணிசமான எண்ணிக்கையிலான தொழிலாளர்களின் ஆதரவினையும் ஸ்கான்டினேவிய வலதுசாரிகளால் பெற முடிந்தது.

சோவியத் ஆதரவு ஆட்சிகளின் வீழ்ச்சிக்குப் பிறகு பெரும் எண்ணிக்கையிலான கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் தீவிர வலதுசாரிகளால் தங்களை மீண்டும் ஒருங்கமைத்துக் கொள்ள முடிந்துள்ளது. பல்கேரியாவின் நேஷனல் அடாகா யூனியன் (ATAKA) மற்றும் ஸ்லோவக் தேசிய கட்சி (எஸ்என்எஸ்) மற்றும் கிரேடர் ருமேனியா கட்சி ஆகியவை சிறப்பான தேர்தல் முடிவுகளை ஈட்டிய அரசியல் சக்திகளில் சிலவாகும். இவை தங்களுடைய சொந்தப் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளன.

போலந்தில் 2015 மே மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் பாபுலிஸ்ட் லா அண்டு ஜஸ்டிஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது. 2015 அக்டோபரில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களில் 37.6 சதம் வாக்குகளைப் பெற்றுள்ள இக்கட்சியானது பனிப்போர் முடிவுக்குவந்த காலத்திற்குப்பின் முதன்முறையாக நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ள கட்சியாகத் திகழ்கிறது. தேசிய உணர்வு, தீவிர பழமைவாத மத விழுமியங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மக்கள் ஆதரவைப் பெறும் வழக்கமான முறைக்கு மாறாக இதன் பொருளாதார செயல்திட்டத்தில் சமூகச் செலவுகளை அதிகரிப்பது, கூலிவிகிதங்களை அதிகரிப்பது, ஓய்வுபெறும் வயதைக் குறைப்பது போன்ற உறுதிமொழிகள் முக்கியமாக இடம் பெற்றுள்ளன. முதலாளித்துவ எதிர்ப்பு இடதுசாரிகள் இல்லாத ஒரு நாட்டில் சமூக ஜனநாயகம் பின்பற்றி வந்த கொள்கைகள் சமுதாயத்தின் மிகவும் பலவீனமான பகுதியினரைத் தாக்கியதை அடுத்து ஒரு சிறிய சக்தியாக ஆனபின் இது ஒரு இடதுசாரிக் கொள்கை மேடையாக இருந்து வருகிறது.

ஐரோப்பாவின் இப்பகுதியில் மிகவும் அச்சத்தை ஏற்படுத்தி வரும் உதாரணமாக ஹங்கேரி இருந்து வருகிறது. உலகமய மும்மூர்த்திகளால் தூண்டப்பட்ட ஹங்கேரிய சோஷலிஸ்ட் கட்சி அரசாங்கமானது கடுமையான சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டதையடுத்து ஹங்கேரி பணச்சுருக்கத்துக்குள் தள்ளப்பட்டுவிட்டது. இதனையடுத்து ஹங்கேரிய சிவிக் யூனியன்/ ஃபிடெச்ஸ் கட்சியானது (ஐரோப்பிய மக்கள் கட்சியுடன் இணைக்கப்பட்ட கட்சி இது) அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டது. பிறகு 2012ஆம் ஆண்டில் நீதித்துறையில் களையெடுப்பு நடத்திவிட்டு வெகுஜன ஊடகத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டது. இது சர்வாதிகாரத் தொனி கொண்ட ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தையும் கொண்டு வந்தது. இது நாட்டை சட்டத்தின் ஆட்சியிலிருந்து அபாயகரமான அளவில் தொலைதூரத்துக்குக் கொண்டு சென்றுவிட்டது. இது போதாது என்று மேலும் சிறந்த ஹங்கேரிக்கான இயக்கம் என்ற பெயரில் 2010ல் இருந்து மூன்றாவது கட்சி ஒன்று அரங்கத்துக்கு வந்துள்ளது. இது 2014ஆம் ஆண்டு தேர்தல்களில் 20.5 சதம் வாக்குகளை பெற்றது. மேற்கு ஐரோப்பா மற்றும் ஸ்காண்டிநேவியாவில் உள்ள பெரும்பாலான தீவிர வலதுசாரிக் கட்சிகளைப் போலன்றி இது ஒரு மிகவும் தீவிர வலதுசாரி போக்கிற்கான மோசமான உதாரணமாக கிழக்கு ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அந்தியருக்கு எதிரான (குறிப்பாக ரோமாவுக்கு எதிரான) வெறுப்புணர்வை வளர்த்தல், யூத பொறுப்பு மற்றும் கம்யூனிச வெறுப்பு போன்றவற்றை பிரச்சாரம் மற்றும் செயல்பாட்டுக்கான தனது முக்கிய கருவிகளாக இது பயன்படுத்தி வருகிறது.

இந்த ஆய்வை முழுமைப்படுத்துவதற்கு ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் பரவிக்கிடக்கின்ற நவீன நாஜி அமைப்புகள் சிலவற்றைப் பற்றி நாம் குறிப்பிட்டாக வேண்டும். இவற்றில் இரண்டு அமைப்புகள் தேர்தல்களில் பெரும் வெற்றிகளைப் பெற்றுள்ளன. ஜெர்மனியின் தேசிய ஜனநாயகக்கட்சி (என்.பி.டி) இரண்டு மாநில சட்டசபைகளில் தடம் பதித்துள்ளது. 2013ஆம் ஆண்டு தேர்தல்களில் 1.5 சதம் வாக்குகளை இது பெற்றுள்ளது. 2012 முதல் இக்கட்சியைச் சேர்ந்த ஒருவர் யூரோ நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். கிரீஸ் நாட்டின் கோல்டன் டான் கட்சியானது 2014ஆம் ஆண்டின் ஐரோப்பியத் தேர்தல்களில் 9.4 சதம் வாக்குகளைப் பெற்றுள்ளது. அத்துடன் 2015 பொதுத்தேர்தல்களில் 7 சதம் வாக்குகளையும் பெற்றதன் மூலம் நாட்டின் மூன்றாவது அரசியல் சக்தியாக அது தன்னை உறுதி செய்து கொண்டது.[22]

எனவே அண்மை ஆண்டுகளில் மலின அரசியல் தேசியக் கட்சிகளும் நவீன பாசிச வலதுசாரிக் கட்சிகளும் அநேகமாக ஐரோப்பாவின் ஒவ்வொரு பகுதியிலும் தங்களுடைய ஆதரவுத் தளத்தைக் கணிசமான அளவுக்கு அதிகரித்துக் கொண்டுள்ளன. பல நேர்வுகளில் அரசியல் விவாத அரங்கில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டும் தகுதி கொண்டவையாக அவை தங்களை நிருபித்துக் கொண்டுள்ளன. சில நேரங்களில் மேலும் மிதமான வலதுசாரிகளுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு அரசாங்கத்தில் நுழைந்துள்ளன. இது ஒரு, கவலையை ஏற்படுத்தக் கூடிய தொற்றுநோயாகும். ஆனால் முதலில் இதற்குக் காரணமாக அமைந்த விஷக்கிருமியை எதிர்த்துப் போராடாமல் நிச்சயமாக இதற்கு எதிர்வினையாற்றுவது சாத்தியமல்ல. அது பிரஸ்ஸல்சில் இன்னமும் நடைமுறைச் செல்வாக்குடன் இருந்து வரும் நவீன தாராளவாத மந்திரம் ஆகும்.

எனினும் கிரீசிலோ ஜெர்மனியின் கிழக்குப் பகுதிகளிலோ தீவிர வலதுசாரிகள் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு பெரிய வரவேற்பைப் பெறவில்லை. அத்துடன் ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் செக் குடியரசு - ஆகியவற்றில் - அது, அதாவது கம்யூனிஸ்டுகள், இடதுசாரிகள் சமுதாயத்தில் எற்கெனவே ஆழமாக வேர்விட்டுள்ளதும் அண்மை ஆண்டுகளில்[23] ஒரு ஒத்திசைவான எதிர்க்கட்சிக்கொள்கையை வளர்த்துள்ளதுமான இடங்களில் தீவிர வலதுசாரி இயக்கங்கள் புதிதாகத் தோன்றுவதற்கான சூழ்நிலைகள் எழவில்லை.

5

ஐரோப்பாவின் முற்போக்கு இடதுசாரிகளுக்கான புதிய அரசியல் புவியியல்

ஐரோப்பாவை அலைக்கழித்துவருகின்ற அரசியல் பொருளாதார நெருக்கடிகள், மலின அரசியல், இனவெறி மற்றும் தீவிர வலதுசாரி சக்திகளின் முன்னேற்றத்துக்கு மட்டும் இட்டுச் செல்லவில்லை. இது நிகழ்ந்த அதேநேரத்தில் ஐரோப்பியக் கமிஷனால் திணிக்கப்பட்ட தேசிய அரசாங்கங்களால் செயல்படுத்தப்பட்ட சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிரான பெரிய போராட்டங்களையும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் தூண்டிவிட்டுள்ளது.

முக்கியமாக, தெற்கு ஐரோப்பாவில் இது இடதுசாரிகள் புத்துயிர் பெற்றுவருவதற்கும் அவை தேர்தல்களில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெறுவதற்கும் காரணமாக இருந்துள்ளது. கிரீஸ், ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் ஆகியவற்றுடன் அயர்லாந்திலும் நவீன தாராளமயமாக்கல் கொள்கைகளுக்கு எதிரான வெகுமக்களின் அணிதிரட்டல்கள் அரங்கேறியுள்ளன. பிறநாடுகளில் இந்த நாடுகளில் காணப்பட்டதைவிட சற்றுக்குறைவான அளவில் வெகுஜன இயக்கங்கள் நடைபெற்றுள்ளன. 2010ஆம் ஆண்டிலிருந்து கிரீஸ் நாட்டில் 40 பொது வேலைநிறுத்தங்களுக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.

ஸ்பெயின் நாட்டில் 2011ஆம் ஆண்டு மே 15 தொடங்கி பல லட்சக் கணக்கான மக்கள் பிரம்மாண்டமான கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். பின்னர் இது இன்டிக்னாடோஸ் என்ற பெயரில் அழைக்கப்பட்ட இயக்கத்தைத் தோற்றுவித்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள் மாட்ரிட் நகரின் பிரதான சதுக்கமாகிய பூர்ட்டா டெல் சோலில் சுமார் நான்கு வாரங்கள் வரையிலும் தங்கியிருந்தனர். அவர்களது இந்த நடவடிக்கை தொடங்கியதற்கு சில நாட்கள் கழித்து இதே போன்றதொரு இயக்கம் ஏதென்ஸ் நகரின் தெருக்களையும் சின்டக்மா சதுக்கத்திலும் நிகழ்த்தப்பட்டது. இந்த இரண்டு நாடுகளிலும் இத்தகைய சமூகப் போராட்டங்கள் இடதுசாரிகளின் பிந்தைய கால வளர்ச்சிக்கும் அவற்றுக்குச்

சாதகமான சூழலை ஏற்படுத்தக்கூடிய பயனுள்ள அடித்தளங்களை நிறுவியது.

மறுபுறத்தில் தொழிற்சங்க இயக்கங்கள் ஒரு பொதுவான சூழ்நிலையை எதிர்கொண்டன என்றபோதிலும், அதாவது நெருக்கடிக்குப் பிந்தையகால அதிகாரபூர்வ நடவடிக்கைகளை ஒருவிதத்திலான சமூகப் பேரழிவுகளை ஐரோப்பிய நாடுகளில் தோற்றுவித்தன என்றபோதிலும் - கோரிக்கைகள் அடிப்படையில் பொதுப் பங்கேற்பு மேடையை உருவாக்கவும், தொடர்ச்சியாக- ஐரோப்பிய பெரு நிலப்பரப்பளவிலான மக்கள் இயக்கங்களை ஒழுங்கமைவு செய்வதற்குமான அரசியல் உறுதி தொழிற்சங்கங்களிடம் இருக்கவில்லை என்பதைக் குறிப்பிடவேண்டும். இதற்கு ஒரேயொரு விதிவிலக்காக ஸ்பெயின், இத்தாலி, போர்த்துக்கல், சைப்ரஸ் மற்றும் மால்ட்டாவில் 2012 நவம்பர் 14ந்தேதியன்று நடைபெற்ற பொது வேலைநிறுத்தத்தையும், இந்த இயக்கத்துக்கு ஆதரவாக பிரான்ஸ், கிரீஸ் மற்றும் பெல்ஜியத்தில் நடைபெற்ற தோழமை இயக்கங்களையும் குறிப்பிடலாம்.

அரசியல் மட்டத்தில் முதலாளித்துவ எதிர்ப்பு இடதுசாரிகள் களத்தில் தங்கள் அணிகளை மறுகட்டமைப்பு செய்யவும் மற்றும் மீள் ஒருங்கிணைப்பிற்குமான பாதையில் உறுதியாகப் பற்றி நின்றனர். பலவிதப் போக்குகளால் தூண்டப்பட்ட புதிய அணிசேர்க்கைகள் வடிவெடுத்தன. அது ஒரு விரிவான அரசியல் விவாதப் பொருட்களுக்கான வட்டமாக அமைந்திருந்தது. அதேநேரத்தில் ஒருவருக்கு ஒருவாக்கு என்ற கொள்கையின் மூலம் பேரளவில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டது.

1999ஆம் ஆண்டில் போர்த்துக்கல்லின் இடது முகாமானது போர்த்துக்கீசியக் கம்யூனிஸ்ட் கட்சியைவிட இடதுசாரித்தன்மை கொண்ட மிகவும் முக்கிய சக்திகளை ஓரணியில் திரட்டியது. அதே ஆண்டில் இடதுசாரிகளின் அடித்தளம் லக்சம்பர்க்கில் ஒரு புதிய தொடக்கத்தைக் கண்டது. 2004ஆம் ஆண்டில் கிரீஸ் நாட்டின் சினாஸ்பிஸ்மோசும் பிற முதலாளித்துவ எதிர்ப்பு சக்திகளின் ஒரு பெரிய வரிசையும் ஒன்றிணைந்து முற்போக்கு இடதுசாரிகளின் கூட்டணியான சிரிசாவை அமைத்தன (இவை ஒரு மெய்யான கட்சியாக சங்கமித்தல் என்பது 2012-ல் தான் நிகழ்ந்தது)

2004ஆம் ஆண்டு மே மாதத்தில் பதினைந்து கம்யூனிஸ்ட் சோஷலிஸ்ட் மற்றும் சுற்றுச்சூழலியக்கக் கட்சிகள் இணைந்த ஐரோப்பிய இடதுசாரிக் கட்சி ஒன்று அமைக்கப்பட்டது. ஐரோப்பிய இடதுசாரிப் போராளிகளின் பிரதான சக்திகளை

ஒரு பொதுத் திட்டத்தின் கீழ் ஒரு அரசியல் அமைப்பாகக் கட்டுவதை நோக்கமாகக் கொண்டு இது அமைக்கப்பட்டது. தற்போது 20 நாடுகளைச் சேர்ந்த அரசியல் அமைப்புகள் இதன் பகுதியாக உள்ளன.[24] இதற்கு சில மாதங்கள் முன்னர் வடக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த ஏழு கட்சிகள் அடங்கிய நார்டிக் கிரீன் லெஃப்ட் கூட்டணியின் உருவாக்கம் இந்த மறு அணி சேர்ப்பிற்கு முன்னோடியாக இருந்தது.

ஐரோப்பிய இடதுசாரிக் கூட்டணியையும் தவிர ஐரோப்பிய முதலாளித்துவ எதிர்ப்பு இடதுசாரி (EACL) என்ற மற்றொரு அமைப்பும் இருந்து வருகிறது. 2000 ஆவது ஆண்டில் துவக்கப்பட்ட ஒரு சிறிய அமைப்பாக உள்ள இதில் 30க்கும் மேற்பட்ட (மிகச் சிறிய) டிராட்ஸ்கியவாத அமைப்புகள் அடங்கியுள்ளன. இதன் பிரதான இயங்குசக்திகளாக போர்த்துக்கல்லின் இடதுமுகாமும், டென்மார்க்கின் யூனிட்டி லிஸ்ட்/ரெட்கிரீன்சும், பிரான்சின் புதிய முதலாளித்துவ எதிர்ப்புக் கட்சியும் இருந்து வருகின்றன. ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் இந்த சக்திகளின் பிரதிநிதிகள் ஐரோப்பிய இடது/நார்டிக் கிரீன் லெப்ட் குழுவுடன் இணைந்துள்ளன[25]

சில ஆண்டுகளுக்குப்பிறகு ஜெர்மன் சோஷியல் டெமாக்ரடிக் கட்சி மற்றும் பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியின்[26] மிகவும் தீவிர உறுப்புகள் பிரிந்துபோய் ஜெர்மானியன் டெமாக்ரடிக் சோஷலிசம் மற்றும் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையையும் விட தீவிர இடதுசாரி நிலைபாட்டை விரைவாக கடைப்பிடிக்கத் தொடங்கின. இது 2007ஆம் ஆண்டில் ஜெர்மனியில் தி லெஃப்ட் (De Linke-DL) கட்சியும் பிரான்சில் 2008ஆம் ஆண்டில் இடதுசாரிக் கூட்டணி (FDG) அமைக்கப்படுவதற்கும் தூண்டுகோலாக அமைந்திருந்தது. இத்துடன் பிரான்சில் 2009ஆம் ஆண்டில் ரெவல்யூஷனரி கம்யூனிஸ்ட் லீக் ஆனது புதிய முதலாளித்துவ எதிர்ப்புக் கட்சியாக (NPA) முழு மாற்றம் அடைந்ததற்குக் காரணமாக ஐரோப்பிய கம்யூனிசத்தின் வர்க்க அடிப்படையிலான சில முன்மாதிரி சக்திகளின் இதே பார்வையைக் குறிப்பிடலாம். அதாவது சமூக ஒதுக்கலுடன் இணைந்த முக்கியமான புதிய முரண்பாடுகளின் மீதான அரசியல் முன்முயற்சிகளின் மீது கவனம் செலுத்துவதற்காக இது நிகழ்த்தப்பட்டது.

இத்தாலியில் 2009லும் புதிதாக அமைக்கப்பட்ட லெப்ட் ஈகாலஜி அண்டு ஃபரீடம் மூன்று கூறுகளை ஒன்றிணைத்தது. அவையாவன: கம்யூனிஸ்ட் ரீ பவுண்டேஷன் கட்சியின் மிதவாதப்பிரிவு இடது ஜனநாயகவாதிகளிலிருந்து வெளியேறியவர்களின் ஒரு குழு

மற்றும் பெடரேஷன் ஆப் தி லெப்ட் அதாவது கம்யூனிஸ்ட் ரீ பவுண்டேஷன் கட்சி மற்றும் மூன்று சிறிய அரசியல் இயக்கங்களின் ஒரு கூட்டணி. ஸ்விட்சர்லாந்தில் தி லெப்ட் (ஏஎல்) எனும் அமைப்பை 2010ல் அமைத்ததில் இதே போன்றதொரு நிகழ்முறை நடந்தேறியது.

2004ஆம் ஆண்டில் ரெஸ்பக்ட் கட்சி மற்றும் 2013ல் லெப்ட் யூனிடியை அமைப்பதன் மூலம் பிரிட்டனிலும் இதே விதமான இந்த போக்கு ஐரோப்பாவிலிருந்து அதனை ஒட்டிய துருக்கிக்கும் பரவியது. பாதையில் பயணிப்பதற்கு முயற்சிக்கப்பட்டது. 2012ல் குர்டிஷ் செயல்வீரர்கள் துருக்கி இடதுசாரிகளின் பல இயக்கங்களுடன் ஒன்றிணைந்து பீப்பிள்ஸ் டெமாக்ரடிக் கட்சியை அமைத்தனர். இது நாட்டின் நான்காவது அரசியல் சக்தியாக விரைவில் வளர்ந்தது. 2015 நவம்பரில் நடைபெற்ற தேர்ல்களில் 10.7 சதம் வாக்குகளைப் பெற்றது.[27]

ஸ்லோவேனியாவில் யுனைடட் லெஃப்ட்டும், ஸ்பெயினில் போடெமோசும் 2014ஆம் ஆண்டில் உருவாயிற்று. ஸ்பெயின் நிகழ்வு ஒரு தனித்துவம் வாய்ந்த உதாரணமாக உள்ளது. ஏனெனில் ஒரு இடதுசாரிக் கட்சி என்பதற்கான பாரம்பரிய வரையறைக்கு அப்பாலும் செல்வதாக அது கூறிக்கொள்கிறது. ஆனால் கடந்த ஐரோப்பியத் தேர்தல்களின்போது அது முதல்முதலாக வேட்பாளர்களை நிறுத்தியது. ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அது யூரோப்பியன் லெஃப்ட்/நார்டிக் கிரீன் லெப்ட் குழுவுடன் இணைந்து இறுதியாக 2015 அக்டோபரில் சிக்கன நடவடிக்கைக்கு எதிரான கூட்டணி என்ற பெயரில் ஒரு புதிய தேர்தல் கூட்டணி அமைக்கப்பட்டது. பீப்பிள் பிபோர் பிராஃபிட் கூட்டணி என்று அழைக்கப்பட்டது. இது சோஷலிஸ்ட் கட்சிக்கும் பீப்பிள் ஃபிபோர் பிராபிட் கூட்டணிக்கும்[28] இடையேயான நீண்டகால பூசலை முடிவுக்குக்கொண்டு வந்தது.

20ஆம் நூற்றாண்டின் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒற்றைக்கல் கட்டமைப்பான, ஜனநாயக மத்தியத்துவக் கட்சி என்பதிலிருந்து மிகவும் மாறுபட்ட பன்முக மாதிரியானது ஐரோப்பிய முற்போக்கு இடதுசாரிகளின் பெரும்பாலான அமைப்புகளுக்கு விரைவாக பரவியது. ஏற்கெனவே இருந்து வரும் சிறிய குழுக்களையும் அமைப்புகளையும் வெறுமனே இணைப்பது சமூக விவாதப் பொருட்களின் விரிவான பரவலான சிதறிய வலைப்பின்னலைத் தொடர்புபடுத்தும் தேவையினால் இயக்கப்பட்டு உண்மையான மறு இணைப்பாக்கமாக ஆக்கி பல்வேறு வித வடிவங்களான

போராட்டங்களை உருவாக்கும் போக்குபோல வெற்றிகரமான பரிசோதனையாக இருக்கவில்லை. புதிய சக்திகளை ஈர்ப்பது, இளவயதினரை அணிதிரட்டுவது, நம்பிக்கை இழந்த போராளிகளை மீண்டும் கொண்டுவருவது, புதிதாக உருவாக்கப்பட்ட கட்சிகளில் தேர்தல்கள் முன்னேற்றத்தைப் பயன்படுத்திக்கொள்வது போன்றவற்றை உள்ளடக்கியதாக இருந்த இடங்களில் இந்த அணுகுமுறை வெற்றிகரமானதாக இருந்து வந்துள்ளது.

2009ஆம் ஆண்டு ஜெர்மன் தேர்தல்களில் டீ லிங்க்கே (Die Link) கட்சி 11.9 சதம் வாக்குகளைப் பெற்றது. இது ஏழாண்டுகளுக்கு முன்னால் ஜனநாயக சோஷலிசக் கட்சி பெற்ற 4 சத வாக்குகளைப் போல் மூன்று மடங்காகும். 2012ஆம் ஆண்டின் பிரெஞ்சு அதிபர் தேர்தல்களில் இடது முன்னணியின் வேட்பாளரான மெலன்கோன் மிக அதிகமான வாக்குகளைப் பெற்றார். 1981ஆம் ஆண்டு முதல் சோஷலிஸ்ட் கட்சியைக் காட்டிலும் இடதுசாரித்தன்மை கொண்ட எந்தவொரு கட்சியும் இந்த அளவுக்கு அதிக வாக்குகளைப் பெற்றதில்லை என்ற சாதனையாக இது இருந்தது. இதே ஆண்டில் சிரிசா பெரும் முன்னேற்றத்தைப் பதிவு செய்தது. மே மாதத் தேர்தல்களில் 16.8 சதம் வாக்குகளையும் ஜூன் மாதத் தேர்தல்களில் 26.9 சதம் வாக்குகளையும் 2015 ஜனவரி தேர்தல்களில் 36.3 சதம் வாக்குகளையும் பெற்றது. அப்போது இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு எந்தவொரு முதலாளித்துவ எதிர்ப்புக் கட்சியும் பெறாத ஒரு தனிச் சிறப்பான ஒரு பெரும்பான்மைக் கட்சியாக ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைத்தல் என்ற சாதனையை நிகழ்த்தியது[29]

ஐபீரியன் வளைகுடாவிலும் அற்புதமான தேர்தல் சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. 2014 ஆண்டு யூரோ தேர்தல்களில் ஸ்பானிஷ் புளூரல் லெஃப்ட் (இஸ்க்வீர்டா யூனிடாவின் தலைமையில் இயங்கிய ஒரு புதிய தேர்தல் கூட்டு) கட்சியானது 10 சதத்துக்கு மேலான வாக்குகளைப் பெற்றது. மற்றொரு கட்சியான பொடெமாஸ் கிட்டத்தட்ட 8 சதம் வாக்குகளைப் பெற்றது. 2015 டிசம்பர் பொதுத் தேர்தல்களில் அனைத்து இடதுசாரிக் கட்சிகளும் பெற்ற வாக்குகள் மேலும் அதிகமானது. அப்போது பொடெமாஸ் 12.6 சதம் வாக்குகளைப் பெற்றது. இஸ்க்வீரிடா யூனிடாவின் கடைசி வடிவமான பாப்புலர் யுனிட்டி 3.6 சதமும்; பல்வேறு உள்ளூர் தேர்தல் பட்டியல்கள்- அவைகளுக்குள் In common, we can (ECW) (கடலோனியா 3.7 சதம்) கமிட்மென்ட் வீ கான் இட் இஸ் டைம் (CPE) (வாலென்சியா 2.6 சதம்) இன் டைடு (ஈஎம்) (கலீசியா 1.6 சதம்) பாஸ்க் கன்ட்ரி யுனைட் ((0.8 சதம்) இவையனைத்தும் சேர்ந்து கிட்டத்தட்ட 9 சதம் அளவுக்கு வாக்குகளைப் பெற்றன.

போர்த்துக்கல்லைப் பொறுத்தவரை 2015 அக்டோபரில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் யூனிடரி டெமாக்ரடிக் கூட்டணி மொத்தம் 8.3 சதம் வாக்குகளையும், இடதுசாரிக் கூட்டு 10.2 சதத்தையும் பெற்று இதற்கு முன்னெப்போதும் இல்லாத சிறந்த சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. நாட்டின் மூன்றாவது அரசியல் சக்தி என்ற இடத்தையும் பெற்றுள்ளது. 2016 ஜனவரியில் நடைபெற்ற அதிபர் தேர்தல்களிலும் இந்த முடிவு உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இடதுசாரிக் கூட்டு மீண்டும் 10 சதத்தைவிடக் கூடுதலான வாக்குகளைப் பெற்றுள்ளது.

நவீன தாராளமயத்துக்கு ஒரு தெளிவான எதிர்ப்பு என்ற தனி இயல்பை எப்போதும் உள்ளடக்கி நடைபெற்ற பன்முக இடதுசாரி பரிசோதனைகள் உள்ளூர் தேர்தல்களில் நல்ல பலனளித்துள்ளன. 2010ஆம் ஆண்டில் லிமெளசின்னில் நல்ல நடைபெற்ற பிரெஞ்சு மண்டலத் தேர்தல்களை ஒரு சிறந்த உதாரணமாகக் குறிப்பிடலாம். அங்கே ஃபிரண்ட் டீ கவுச் (இடது முன்னணி) கூட்டணியும் புதிய முதலாளித்துவ எதிர்ப்புக் கட்சியும் இணைந்து இரண்டாவது சுற்றுத் தேர்தல்களில் 19.1 சதம் வாக்குகளைப் பெற்றது. ஸ்பெயின் நாட்டின் நகராட்சித் தேர்தல்களில் மாட்ரிட் அஹோரா மற்றும் பார்சிலோன என் கோமு கட்சிகளின் பட்டியல்கள் (இஸ்க்வீர்டர் யுனிடா மற்றும் பொடெமாஸ் இணைந்து அமைந்தவை) நாட்டின் இரண்டு மிகப்பெரிய நகரங்களில் வெற்றி பெற்றது. இந்த இரண்டு உதாரணங்களிலும் தேசிய தலைமைக் குழுக்களுக்கிடையேயான கருத்துவேறுபாடுகளிலிருந்து மீண்டு வருவதை கீழணிகளுக்கிடையே ஏற்பட்ட விரிவான கூட்டணிகளே சாத்தியமாக்கின.

பிற அரசியல் கட்சிகளுடன் கூட்டு எதனையும் வைத்துக் கொள்ளாத கட்சிகளும்கூட கடந்த பத்தாண்டுகளில் சில நேரங்களில் குறிப்பிடத்தக்க தேர்தல் வெற்றிகளைப் பெற்றுள்ளன. உதாரணமாக, நெதர்லாந்து 2006ஆம் ஆண்டில் ஐரோப்பிய அரசியல் அமைப்புச் சட்டம் குறித்த பொதுவாக்கெடுப்பில் 'இல்லை' என்பதற்கு ஆதரவான வாக்களிப்பு செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்ட நேரத்தில் சோஷலிஸ்ட் கட்சியின் வாக்கு சதவீதம் 16.6 'சதம் என்ற அளவுக்கு உயர்ந்தது. சைப்ரஸ் நாட்டின் அதிபர் தேர்தல் 2009ஆம் ஆண்டு நடைபெற்றபோது அகெல் (AKEL) கட்சியின் பொதுச் செயலாளரான டெமட்ரிஸ் கிறிஸ்டோபியாஸ் தேர்தல்களின் முதல் சுற்றில் 33.2 சதம் வாக்குகளும் இரண்டாவது சுற்றில் 53.3 சதம் வாக்குகளையும் பெற்று வெற்றி பெற்றார். எனினும் சைப்ரஸ் தீவை 1974ஆம் ஆண்டிலிருந்து பிளவுபடுத்தி வந்த மோதலை அவரால் முடிவுக்குக் கொண்டு வரவில்லை என்பதாலும் பொருளாதாரம்

குறித்த மும்மூர்த்திகளின் கோரிக்கைகளுக்கு வெளிப்படையாக அவர் அடிபணிந்தாலும் அவரது ஆட்சி பின்னடைவுகளோடு முடிவடைந்தது.

கிரீஸ் நாட்டில் சிரிசா அரசாங்கத்தின் வெற்றியானது சில ஆண்டுகளுக்கு முன்னர் நினைத்துக்கூட பார்க்க முடியாததாக இருந்த, ஐரோப்பிய இடதுசாரிப் புவியியலை உலுக்கி எடுத்த மற்றொரு திருப்புமுனை எனக் குறிப்பிடலாம். 2015 செப்டம்பரில் அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் (பிரைமரி) மாதிரியில் நடைபெற்ற தேர்தல்கள் பிரிட்டிஷ் லேபர் கட்சியின் 59.5 சதம் உறுப்பினர்களும், பதிவு செய்யப்பட்ட ஆதரவாளர்களும், ஜெரோமி கோர்பினைத் தங்களுடைய புதிய தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்காக வாக்களித்தனர். 20 ஆண்டுகளுக்கு முன்னர் டோனி பிளெயர் ஆதிக்கம் செலுத்திய ஒரு நாட்டில் முதலாளித்துவ எதிர்ப்பாளர் என்று வெளிப்படையாக அறிவித்துக்கொண்ட இவர், லேபர் கட்சியின் வரலாற்றில் ஆகப்பெரிய இடதுசாரியான இவர் அந்தக் கட்சியின் உச்சமட்ட பதவியை வகித்து வருகிறார். இந்த அசாதாரண திருப்பமானது, இடதுசாரிகள் புத்துயிர் பெறுவதைத் குறிக்கும் மேலும் ஒரு குறிப்பிடத்தக்க உதாரணமாகும்.

ஐரோப்பிய ஒன்றிய மட்டத்தில் தீவிர இடதுசாரிகளின் பொதுவான முனனேற்றமானது 2014ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐரோப்பியத் தேர்தல்களில் உறுதிப்பட்டது. அப்போது பெற்ற வாக்குளின் மொத்த எண்ணிக்கை 1,29,81,378 ஆகும். அதாவது இது 8 சதம் வாக்குகளை பெற்றுள்ளது. 2009ஆம் ஆண்டில் பெற்ற வாக்குகளை விட இது 18,85,574 வாக்குகள் கூடுதலாகும்[30]

தேர்வு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ற ஒரே அளவீட்டின்படி மட்டும் பார்த்தாலும் (6.9 சதம் - அதாவது 52 நாடாளுமன்ற உறுப்பினர்கள்) ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் ஐரோப்பிய யுனைடட் லெஃப்ட்/ நார்டிக் கிரீன் லெப்ட் அணியானது தற்போது ஐந்தாவது அரசியல் சக்தி என்ற நிலையை எட்டியுள்ளது. 2009ல் ஏழாவது இடத்தில் இருந்தது. தற்போது இந்த நிலைக்கு உயர்ந்துள்ளது[31] இது இவ்வாறு ஐரோப்பிய மக்கள் கட்சிக்குப் பின்னால் (29.4 சதம்) சோஷலிஸ்டுகள் மற்றும் ஜனநாயக வாதிகளின் முற்போக்குக் கூட்டணி (25.4 சதம்) ஐரோப்பிய பழமைவாதிகளும் சீர்திருத்த வாதிகளும் (9.3 சதம்) ஐரோப்பாவுக்கான ஜனநாயக வாதிகள் மற்றும் தாராளவாதிகளின் கூட்டணி (8.9 சதம்) என்ற வரிசையில் வருகிறது. ஆனால் கிரீன்ஸ்/யூரோப்பியன் ஃபிரி அலையன்சுக்கு (6.6 சதம்) முன்னாலும்

யூரோப் ஆப் பிரீடம் அண்டு டைரக்ட் டெமாக்ரசி (6.4 சதம்) மற்றும் யூரோப் ஆப் நேஷன்ஸ் அண்டு பிரீடம் (5.2 சதம்) கட்சி ஆகியவைகளுக்கு முன்னாலும் இடம்பிடித்துள்ளது.

எனினும், இந்த சித்தரிப்பினை மூடிமறைக்கக்கூடிய சில எதிர்மறை அம்சங்களும் உள்ளன. பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தீவிர இடதுசாரியினர் பெரும்பாலும் தனிமைப்பட்டுவிட்டனர் இல்லையென்றால், இன்னமும் விளிம்புநிலையிலேதான் வைக்கப்பட்டுள்ளனர்[32] அங்கு நடக்கும் சமூகப் போராட்டங்களிலிருந்து அவர்கள் விலகியே இருக்கின்றனர். உள்ளூர் பகுதிகளிலும் தொழிற்சங்கங்களிலும் வேர் விடாத நிலையில் உள்ளனர். இளையதலைமுறையினரால் அறியப்படாதவர்களாக இருக்கின்றனர். பெரும் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய குறுங்குழு மனப்பான்மை மற்றும் உள்ளகப் பிளவுகளால் மீண்டும் மீண்டும் அலைக்கழிக்கப்பட்டு வருகின்றனர். வேறுவிதமாகக் குறிப்பிட்டால் வளர்ச்சியடைவதற்கான உடனடி சாத்தியக்கூறு அதற்கு இல்லை எனலாம்.

இந்த நிலை தேர்தல்களிலும் பிரதிபலித்துள்ளது. போலந்து, ருமேனியா, ஹங்கேரி, பல்கேரியா, போஸ்னியா-ஹெர்ஷகோவினா மற்றும் எஸ்தோனியா ஆகிய ஆறு நாடுகளில் முற்போக்கு இடதுசாரிகளுக்கு 1 சதத்துக்குக் குறைவான வாக்குகளே கிடைத்தன. குரோஷியா, ஸ்லோவேகியா, லித்துவேனியா, லாட்வியா போன்ற நாடுகளிலும் அதன் நிலை சிறப்பானதென்று கூறமுடியாது. ஆஸ்திரியா, பெல்ஜியம், ஸ்விடசர்லாந்து ஆகிய நாடுகளிலும் முற்போக்கு இடதுசாரிகள் மிகவும் பலவீனமாகவே இருந்துவருகின்றனர். செர்பியாவில் பல ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்லோப்டன் மிலோசெவிச் தலைமையில் செயல்பட்ட சோஷலிஸ்ட் கட்சியுடனேயே இடதுசாரிகள் அடையாளம் காணப்படுகின்றனர்.

எனவே ஐரோப்பாவில் நாம் காணும் உண்மை நிலையானது மட்டுமீறிய அளவில் வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் கொண்டதாக இருந்து வருகிறது. ஐபீரியன் வளைகுடாவிலும் மத்தியதரைக்கடல் நாடுகளிலும் (இத்தாலியைத் தவிர) அண்மை ஆண்டுகளில் முற்போக்கு இடதுசாரிகள் குறிப்பிடத்தக்க அளவில் விரிவடைந்துள்ளனர். கிரீஸ், ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் சைப்ரஸ் நாடுகளில் அந்த சக்திகள் தங்களை உறுதிப்படுத்திக்கொண்டுள்ளனர். அரசியல் அரங்கத்தில் பிரதான செயல்பாட்டாளர்கள் மத்தியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

பிரான்சிலும் கூட சமுதாயத்திலும் அரசியலிலும் ஓரளவுக்கு குறிப்பிடத்தக்க பாத்திரத்தை அவர்கள் மீண்டும் பெற்றுள்ளனர். இதற்கிடையே அயர்லாந்தில் சின்ஃபென்னின் முற்போக்குக் குடியரசு சோஷலிசமானது (மிதவாத அரசியல் சக்தியானாலும்) 2014 யூரோ தேர்தல்களில் 22.8 சதம் வாக்குகளைப் பெற்று பழமைவாத சக்திகளின் முன்னேற்றத்துக்கு ஒரு தடையாக இருந்துள்ளது.

மத்திய ஐரோப்பாவில் ஜெர்மனியிலும் நெதர்லாந்திலும் முற்போக்கு இடதுசாரிகள் தங்களுடைய கணிசமான தேர்தல் கள வலிமையை நீடிப்பதில் வெற்றி பெற்றுள்ளனர். ஆனால் பிற இடங்களில் அதன் செல்வாக்கு வரம்புக்குட்பட்டதாகவே உள்ளது. நார்டிக் நாடுகளில் 1989க்குப் பிறகு அது பெற்ற நிலைகளை அது பாதுகாத்துக் கொண்டுள்ளது. (தேர்தல்களில் சுமார் 10 சதம் அளவு வாக்குகளைப் பெற்றுள்ளது) ஆனால் மக்கள் மத்தியில் பரவலாக உள்ள அதிருப்தியை தனது பக்கத்துக்கு சாதகமாக ஈர்ப்பதற்குத் திறனற்றதாக அது உள்ளது. அதிருப்தி கொண்ட மக்கள் பிரிவினர், தீவிர வலதுசாரிப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளனர்.

எனினும் முற்போக்கு இடதுசாரிகளின் பிரதான பிரச்சனை என்பது, மேலும் கிழக்குத் திசையில் இருந்து வருகிறது. அங்கே பொஹிமியா கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் செக் குடியரசின் மொரேலியா மற்றும் ஸ்லோவேனியாவில் ஒன்றுபட்ட இடதுசாரி (யுனைடெட் லெஃப்ட்) தவிர அது நடைமுறையில் காணப்படாத ஒன்றாகவும், 'நடைமுறையில் இருந்து வரும் சோஷலிசம்' என்ற பேயச்சத்திற்கு அப்பால் நகரும் திறனற்றதாகவும் இருந்து வருகிறது. இத்தகைய சூழ்நிலைகளில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கிழக்கு நோக்கிய விரிவானது, அரசியல் குவிமையப்புள்ளியை வலதுசாரிகளின் பக்கம் தீர்மானகரமான விதத்தில் திருப்பிவிட்டது. யுத்தத்தால் அலைக்கழிக்கப்படும் பகுதிகளிலிருந்து மக்கள் தப்பி வருவது தொடர்பாகவும், கிரேக்கத்தின் சமீப நெருக்கடிகள் குறித்தும். அங்கு எடுக்கப்படும் கடுமையான தீவிர நிலைபாடுகளிலிருந்து நாம் இதனை அறிந்து கொள்ளலாம்.

6

யூரோ ஒன்றிய வட்டத்திற்கு அப்பால்

தீவிர இடதுசாரிக் கட்சிகள் விரிவான, மேலும் பன்முகத்தன்மை கொண்ட அமைப்புகளாக மாறியது, அவை துண்டுதுண்டாக சிதறுவதைக் குறைப்பது என்ற விதத்தில் பயனளித்துள்ளது. ஆனால் அது அவற்றின் அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவில்லை என்பதை உறுதியாகக் குறிப்பிடலாம்.

கிரீஸ் நாட்டில் அலெக்சிஸ் சிப்பிராஸ் தலைமையிலான முந்தைய அரசாங்கம் பதவிக்கு வந்தபோது, நிர்வாகங்களால் பின்பற்றி வந்த சிக்கன நடவடிக்கைகளுடன் முறிப்பை ஏற்படுத்திக் கொள்ள சிரிசா விரும்பியது 2010க்குப் பிறகு ஒன்றன்பின் ஒன்றாக ஆட்சிபீடமேறிய மைய இடதுசாரிகள், தொழில்நுட்ப வாதிகள் அல்லது மைய வலதுசாரிகள் ஆகிய அனைத்துக் கட்சிகளின் நிர்வாகங்களின் சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிராகவும் இதே நிலைபாட்டை சிரிசா எடுத்துவந்தது. எனினும் பொதுக்கடனின் பிரம்மாண்ட அளவின் காரணமாக இத்தகைய கொள்கைமாற்றத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதானது, சர்வதேச கடன் நிறுவனங்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்குக் கீழாக வைக்கப்பட்டது.

ஐந்து மாதங்களுக்கு, களைப்பை ஏற்படுத்தும் விதத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அக்காலத்தில் ஐரோப்பிய மத்திய வங்கி ஏதென்ஸ் மத்திய வங்கிக்குக் கடன் வழங்குவதை மீண்டும் நிறுத்திவிட்டது. இதனையடுத்து கிரீஸ் வங்கிகளில் பணப்புழக்கம் முற்றிலும் வறண்டு போனது. இந்நிலையில் சிரிசாவினால் இதுவரை உறுதியாக எதிர்க்கப்பட்டு வந்த அனைத்து பொருளாதார வழிமுறைகளும் அடங்கிய ஒரு புதிய விடுவிப்பு திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் திணித்தனர். 2010ஆம் ஆண்டு முதல் பிரஸ்ஸல்ஸ் ஆவணத்தை ஏற்றுக்கொண்ட அரசியல் சக்திகளின் நாடாளுமன்ற வட்டம் விரிவானதாகவே இருந்தது என்பது உண்மையே. இடதுசாரிகள் தொடங்கி வலதுசாரிகள் வரை சிக்கன நடவடிக்கை என்னும் தவிர்க்க இயலாத தருக்கத்திற்கு தலை வணங்கிவிட்டனர். அத்தகைய கட்சிகளில் நியூடெமாக்ரசி, சுயேச்சை கிரேக்கர்கள் (ANEL), தி ரிவர், டெமாக்ரடிக் லெஃப்ட்,

பான்ஹெல்லனிக் சோஷலிச இயக்கம் என்ற இந்த வரிசையில் இறுதியாக சிரிசாவும் கூட சேர்ந்துள்ளது. 2010 ஜூலை 5 அன்று நடத்தப்பட்ட ஆலோசனைக்கான[33] பொதுவாக்கெடுப்புக்குக் கிடைத்த சக்திமிக்க எதிர்வினையும் கூட (மும்மூர்த்திகளின் ஆலாசனையை 61.3 சதம் பேர் உறுதியாக நிராகரித்திருந்தனர்) வேறு ஒரு முடிவைக் கொண்டு வருவதற்கு வழி வகுக்கவில்லை.

ஐரோப்பிய மண்டலத்திலிருந்து கிரீஸ் வெளியேறுவதைத் தவிர்ப்பதற்காக சிப்பிராஸ் அரசாங்கம் மேலும் பல சமூக இழப்புகளுக்கு ஒப்புக்கொண்டது. பொதுச் சொத்துக்களை பேரளவில் அடிமாட்டு விலைக்கு விற்பதற்கும், கிரேக்கப் பொருளாதார வளர்ச்சியைப் பற்றிக் கவலைப்படாமல் சர்வதேச கடன் வழங்குவோர் நலன்களுக்கு ஆதரவான ஒரு பெரிய பட்டியல் கொண்ட சிக்கன நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஒப்புக் கொண்டது.[34]

மறுபுறத்தில் ஐரோப்பிய மண்டலத்திலிருந்து கிரேக்கநாடு வெளியேறுமானால் (ஐரோப்பிய ஒன்றியத்துடன் நடைபெற்று வந்த பேச்சு வார்த்தைகள் முறிவடைந்து இது நிகழ்ந்தால்) நாட்டை ஒரு பொருளாதாரக் குழப்பதிலும் ஆழமான பொருளாதார மந்த நிலையிலும் தள்ளிவிடலாம் என்று சிலர் கருதி வந்தனர். அத்தகைய பெரும் தாக்கம் ஏற்படுத்தும் முடிவுக்கு முன்கூட்டியே தயார் செய்து கொள்வது அவசியம். ஒவ்வொரு சாத்தியக் கூற்றினையும் கவனமாகப் பரிசீலித்து, ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான எதிர்நடவடிக்கைகளை முழுமையாகவும் கவனமாகவும் திட்டமிட வேண்டியிருக்கும். அனைத்துக்கும் மேலாக சமூக மற்றும் அரசியல் சக்திகளின் ஒரு பெரிய வரிசையை வென்றெடுப்பதுடன் அவற்றின் ஆதரவினைச் சார்ந்தும் இருக்க வேண்டியிருக்கும். அவ்வாறில்லையெனில் எவ்வளவு காலத்திற்கு என தீர்மானிக்க முடியாத நீண்டகாலத்துக்கு கிரேக்கம் கடைப்பிடித்தாக வேண்டிய கட்டாயத்தில் உள்ள பொருளாதாரக் கொள்கைகள் கோல்டன் டான் போன்ற நவீன பாசிசவாதிகளுக்கு மேலும் அதிக பரப்பைத் திறந்துவிடும்.

சிப்பிராஸ்க்கும் ஐரோப்பியக் குழுவுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் ஒன்றை பெரும் அளவில் தெளிவுபடுத்தின. ஒரு இடதுசாரிக்கட்சி தேர்தல்களில் வெற்றிபெற்று மாற்றுப்பொருளாதாரக் கொள்கைகளை அமல்படுத்த முயற்சிக்குமானால் பிரஸ்ஸல்ஸ் நிறுவனங்கள் தலையிட்டு அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தயாராக இருக்கின்றன என்பதாகும். நவீன தாராளமய நம்பிக்கைகளை 1990களில் நிபந்தனையின்றி ஏற்றுக்கொண்டதன் காரணமாக ஐரோப்பிய

சமூக ஜனநாயக சக்திகள் மைய வலதுசாரி சக்திகளுடன் கூட்டணி அமைத்துக் கொண்டன. இன்றைய தினம் இதற்கு வேறுபட்ட விதத்தில் ஒரு தீவிர இடதுசாரிக் கட்சி பதவி வரும்போது மும்மூர்த்திகளின் கூட்டானது நேரடியாகக் களத்தில் இறங்குகிறது. தனது பொருளாதாரத் தாக்கீதுகளில் தலையிட்டு மாற்றங்களைக் கொண்டு வரமுடியாதவாறு புதிய அராசாங்கத்தைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறது. தேர்தல்களில் வெற்றி பெறுவது மட்டும் போதுமானதல்ல; நவீன தாராளமய முதலாளித்துவத்துக்கான முக்கிய அடித்தளமாக ஐரோப்பிய ஒன்றியம் ஆகிவிட்டது.

கிரேக்க நிகழ்வை அடுத்து, என்ன விலை கொடுத்தாவது ஒற்றை நாணயமுறை வைத்திருப்பதன் புத்திசாலித்தனம் குறித்து மேலும் ஆழமான கூட்டுச் சிந்தனை தோன்றியுள்ளது. ஒரு புதிய மாறுபட்ட ஐரோப்பிய அரசியல் ஒன்றியத்துக்கான திட்டத்தைக் கைவிடாமல் தற்போதைய பொருளாதாரக் கொள்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு சிறந்த வழிமுறைகள் எவை என்பதைப் புரிந்துகொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போதைய புறச்சூழலைத் தொடர்ந்து வைத்துக் கொண்டே ஐரோப்பியக் கொள்கைகளை மாற்றியமைப்பது இன்னமும் சாத்தியமானதுதான் என்பதே தீவிர இடதுசாரிக்கட்சிகளின் மத்தியில் பெரும்பான்மை ஆதரவு பெற்ற நிலைபாடாக உள்ளது. அதாவது 2002ஆம் ஆண்டில் யூரோ நடைமுறைக்கு வந்தபோது எட்டப்பட்ட பணமுறையின் ஒற்றுமையை முடிவுக்கு கொண்டு வராமல் செயல்படுவதாகும்.

இக்கருத்தை இன்னமும் உறுதியாகப் பற்றி நிற்கும் முக்கிய சக்தியாக சிரிசா இருந்து வருகிறது. அரசாங்கத்தில் இருந்தபோது மாற்றுத் தீர்வுகளை வகுக்கவும் அமல்படுத்தவும் அதற்கு வாய்ப்பு இருந்தது. எத்தகைய மாற்றத்தையும் தடுப்பதற்கு ஐரோப்பிய ஒன்றிய நிறுவனங்களின் முறையற்ற நிர்ப்பந்தங்கள் ஒரு புறத்தில் இருந்தன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் கிரீஸ் நாடு ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவது என்ற சாத்தியத்தை அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. ஐரோப்பியக் குழுவின் எழுத்துபூர்வ ஆலோசனைகளை எதிர்த்து வந்த கட்சியின் ஒரு பிரிவினருடன் ஏற்பட்ட மோதலையடுத்து குறுகிய காலத்தில் அழைத்த தேர்தல்களில் சிப்பிராஸ் வெற்றி பெற்றார். 35.5 சதம் மக்கள் ஆதரவினைப் பெற்று உள்ளக மோதல்கள் என்ற அபாயத்தைக் கொண்டிராத ஒரு ஒத்திசைவான நாடாளுமன்றக் குழுவுடன் மீண்டும் ஆட்சிக்குத் திரும்பினார்.

எனவே, கூடுதல் சதவீத வாக்காளர்கள் தேர்தல்களில் வாக்களிக்கவில்லை (ஏழு மாதங்களுக்கு முன் நடைபெற்ற

தேர்தல்களில் பங்கேற்றவர்களை விட சுமார் 7 சதம் அளவுக்குக் குறைவாகவே வாக்களித்தனர்) என்ற போதிலும் ஜூலைமாத பொதுவாக்கெடுப்பில் வாக்களித்தவர்களை விட கணிசமான எண்ணிக்கையினரான 6 லட்சம் பேர் வாக்களிக்கவில்லை என்றபோதிலும் கிரேக்க மக்கள்திரளின் ஓரளவு பெரிய பகுதியினரின் ஆதரவினைத் தொடர்ந்து பெறுவதில் சிரிசா வெற்றி பெற்றுள்ளது என்பது உண்மையே. எனினும், அவர்கள் அளித்த நம்பிக்கை வாக்கெடுப்பு சோதனைக்குள்ளாக்கப்படும். ஐரோப்பியக் குழுவினால் திணிக்கப்பட்ட நலத்திட்ட வெட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் தெரியவரும்போது இது நிகழும். இதுவரை நாம் கண்டிராத; மேலும் கூடுதலான பதட்ட நிலைக்காட்சிகள் அரங்கேறக்கூடும் என்று முன்கூட்டியே கணிப்பதானது மிகவும் அவசரக் கோலத்தில் செய்யப்படும் மதிப்பீடாக இருக்காது என்று குறிப்பிடலாம்.

இரண்டுமுனை வியூகம் ஒன்றை சிரிசா கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. திருமூர்த்திகளின் முந்தைய விடுவிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்திய பிற கட்சிகள் எல்லாம் எதிர்கொண்ட மக்கள் ஆதரவு இழப்பைத் தவிர்க்கும் நோக்கம் கொண்டதாக இந்த வியூகம் அமைந்துள்ளது. ஒரு புதிய பணச்சுருக்க வட்டம் தோன்றுவதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் பொதுக்கடனை கணிசமாகக் குறைப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் கிரேக்க அரசாங்கம் ஈடுபடும். பிரஸ்ஸல்சினால் திணிக்கப்பட்டதற்கு இணையான மற்றொரு நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்கு அது முயற்சிக்கும். மிகவும் அண்மைக்கால எழுத்துப்பூர்வ ஆலோசனைகளின் விளைவுகளுக்கு வரம்பு கட்டும் விதத்தில் சில மறுபகிர்மான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2015ஆம் ஆண்டில் என்ன நிகழ்ந்தது என்ற அடிப்படையில் பரிசீலனை செய்தால், இந்த செயல்திட்டம் முற்றிலும் சாத்தியமற்றது என்று வாதிடுவதற்கான புறவய அடிப்படைகள் இருக்கத்தான் செய்கின்றன. சிப்பிராஸ் அரசாங்கத்தின் அனுபவத்துக்குப் பிறகு, கடனை மறுகட்டமைப்புச் செய்வதை ஐரோப்பிய ஒன்றிய நிறுவனங்கள் நிராகரிப்பது சாத்தியமானது என்ற நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதன் சாத்தியத்திற்கு இடதுசாரிகள் தயாராக இருக்க வேண்டும் என்பது தெளிவாகியுள்ளது. எனினும், அனைத்துத் தீங்குகளுக்கும் இதுவே தீர்வு என்று நினைப்பது தவறு எனலாம்.

தற்போதுள்ள அமைப்பு முறைக்குள் இருந்துகொண்டே ஐரோப்பிய ஒன்றியத்தை சீர்திருத்த முடியும் என்று சிரிசா

மட்டுமல்லாது ஏனைய ஐரோப்பிய இடதுசாரி கட்சியின் பிற முக்கிய பகுதிகளும் கருதி வருகின்றன. ஜெர்மனியின் டீ லிங்கே (Die Linke) பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்பெயின் நாட்டின் இஸ்க் விரிடா யூனிடா கட்சி போன்ற கட்சிகள் சிந்தனைப்போக்கைத்தான் கொண்டுள்ளன. போடேமாஸ் அமைப்பும் இந்த அணியில்தான் உள்ளது. ஏனெனில், மும்மூர்த்திகளால் திணிக்கப்பட்ட சிக்கன நடவடிக்கைகளுடன் முறிப்பை ஏற்படுத்தத் தயாராக உள்ள சக்திகள் கிரேக்க அரசாங்கத்தில் இணைந்திருப்பார்களானால் இன்றைய தினம் மாற்ற இயலாததாகத் தோன்றும் ஒன்றைத் தகர்ப்பதற்கான வழி திறக்கப்பட்டிருக்கும் என்று அக்கட்சியின் தலைமை கருதுகிறது. போர்த்துக்கல்லில் அண்மையில் நடைபெற்ற தேர்தல்களை அடுத்து, முற்றிலும் எதிர்பாராத கூட்டணி[35] ஒன்று தோன்றியுள்ளது. சோஷலிஸ்டான அன்டோனியா கேஸ்டாவின் தலைமையிலான சிறுபான்மை அரசாங்கத்துக்கு இடதுசாரிக்குழுவும் ஒன்றுபட்ட ஜனநாயகக் கூட்டணியும் வெளியிலிருந்து ஆதரவை வழங்கி வருகின்றன. இக் கூட்டணியின் தோற்றம் அத்தகைய நம்பிக்கைகளை பலப்படுத்தியுள்ளது.

ஸ்பெயின் நாட்டிலும், இதேபோன்றதொரு நிகழ்வு அரங்கேறாது என்று கூற இயலாது. ஏனெனில், அங்கே தற்போது ஸ்பானிஷ் சோஷலிசத் தொழிலாளர் கட்சிக்கும் (PSOE) பொடேமாசுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

பிறருடைய கருத்துக்களின்படி-கிரேக்க நெருக்கடி என்பது உண்மையில் நவீன தாராளமய முதலாளித்துவ யுகத்தில் ஜனநாயகத்துக்கான நெருக்கடி-தற்போது நிலவிவரும் ஐரோப்பிய மாதிரியை சீர்திருத்த முடியாது என்பதை உறுதிப்படுத்துவதாகத் தோன்றுகிறது. இதற்குக் காரணம், கிழக்கு நோக்கிய விரிவாக்கக் காலத்திலிருந்து முதலாளித்துவ எதிர்ப்பு சக்திகளுக்கிடையேயான உறவானது முதலாளித்துவ எதிர்ப்பு இடதுசாரிகளுக்குக் குறைவான அளவிலேயே சாதகமாக இருக்கிறது என்பதால் மட்டும் அல்ல - அவற்றின் பொதுவான கட்டுமானமே இதற்குக் காரணம் ஆகும். மாஸ்டிரிச் உடன்பாடு கையெழுத்திடப்பட்ட பிறகு மேலும் மேலும் அதிகமான கடுமையுடன் திணிக்கப்படும். பொருளாதார வரையறைகள் தவிர்க்க முடியாத விதத்தில் மேலும் அதிக சிக்கலான மற்றும் பன்முகப்பட்ட அரசியல் எழுச்சியைக் குறைப்பதாகவும் சில நேரங்களில் நடைமுறையில் நிராகரிப்பதாகவும் இருந்து வருகிறது.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் தொழில்நுட்பவாத மற்றும் 'சித்தாந்தம் அற்ற' என்பதான ஒரு ஏமாற்றுத்தன்மை வாய்ந்த போர்வையில் நவீனதாராளமயக் கொள்கைகள் ஐரோப்பா

முழுமையிலும் நுழைவதில் வெற்றிபெற்றுள்ளன. இவை அதன் மக்கள்நல அரசு மாதிரிக்கு பலத்த அடியை வழங்கியுள்ளன. நெருக்கடியின் திசைவழியை மாற்றுவதற்கு இன்றியமையாதவையாக அமைந்த பொதுமுதலீட்டுத் திட்டங்களைத் துவக்குவதற்குத் தேவையான முக்கியமான அரசியல் மற்றும் பொருளாதார இயக்குக் கருவிகள் தங்களிடமிருந்து சிறிது சிறிதாக பறிக்கப்பட்டுவிட்டதை தனி நாடுகள் கண்டன. இவற்றுக்கெல்லாம் மேலாக மக்களுடைய அனுமதியைப் பெறாமல் முக்கிய முடிவுகளை எடுக்கின்ற ஜனநாயக விரோத நடைமுறைகள் தங்களை ஆழமாக நிலை நிறுத்திக் கொண்டுள்ளன. அதன்காரணமாக, அவை முற்றிலும் இயற்கையானது போல தோற்றமளிக்கின்றன.

ஐரோப்பிய மண்டலத்தை ஜனநாயகப்படுத்துவது என்பது ஒரு பிரமையே என்று கருதக்கூடியவர்கள் தீவிர இடதுசாரிப் பிரிவில் ஒரு சிறுபான்மையினர்தான் என்ற போதிலும், சமீபத்திய மாதங்களில் அவர்களின் அணிகள் மேலும் பலமடைந்து வருகின்றன. பாரம்பரியமான, ஐரோப்பிய யூனியனில் நம்பிக்கையற்ற சக்திகளாக இருந்து வரும் போர்த்துக்கல் கம்யூனிஸ்ட் கட்சி, கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சி அல்லது டென்மார்க்கின் யூனிடாரிலிஸ்ட்/ரெட்கிரீன் ஆகியவற்றோடு சிரிஸாவிலிருந்து பிரிந்த பாப்புலர் யூனிடி கட்சியும் சேர்ந்துள்ளது. 2015 ஆகஸ்டில், ஏதென்ஸ் நகரில் தோன்றிய இக்கட்சியானது யூரோ குழுவின் தாக்கீதுகளை ஏற்றுக்கொண்ட சிப்பிராசின் முடிவுக்கு எதிரான கணிசமான எண்ணிக்கையிலான முன்னாள் தலைவர்களையும் உறுப்பினர்களையும் தனது கட்சிக்குள் சேர்த்துள்ளது. டிராக்மாவுக்கு மீண்டும் திரும்புவதை இது ஆதரிக்கிறது என்றபோதிலும் கடந்த தேர்தல்களுக்குப் பிறகு 2.8 சதம் அளவுக்கே மக்கள் ஆதரவினைப் பெற்றுள்ள இக்கட்சியானது கிரேக்க நாடாளுமன்றத்துக்கு வெளியேதான் தொடர்ந்து இருந்து வருகிறது.

அதே நேரத்தில், பல்வேறு அறிவு ஜீவிகளும் அரசியல் தலைவர்களும் யூரோவுக்கு[36] எதிரான வெளிப்படையான நிலைபாட்டை எடுத்துள்ளனர். உதாரணமாக, ஐரோப்பியப் பணமுறைக்கு மீண்டும் திரும்பும் (ஒரு நெளிவுசுளிவான விதத்தில்) ஆலோசனையை லாபோன்டைன் வெளியிட்டுள்ளார். அதாவது யூரோவை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த ஒப்பந்தமானது பல்வேறு நாடுகளின் தேசிய நாணயங்களுக்கிடையே பரிவர்த்தனை விகிதங்கள் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட விதத்தில் ஏற்றஇறக்கங்களைக் கொண்டதாக இருப்பதை விதிக்கிறது. கிரீஸ் நாட்டின் மீது வலிந்து கொண்டுவரப்பட்டுள்ள புதிய, ஏற்றுக்கொள்ள

இயலாத அழுத்தங்களின் பின்னணியில் சிக்கன நடவடிக்கைக் கட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உடனடித் தீர்வுகளின் தேடலானது அவற்றுக்குரிய அனைத்து வழிவகைகளையும் செய்துதான் ஆகவேண்டும் என்பது இன்றியமையாததாக்குகிறது. ஐரோப்பிய ஒற்றுமை என்ற முழு செயல்திட்டத்தையும் தடுத்து நிறுத்துவதற்கான முதல் நடவடிக்கையாக பழைய பணமுறைக்குத் திரும்புவதை ஒரு அடையாள மட்டத்தில் காணமுடியும், அரசியல் ரீதியாகக் காணும்போது இது மலின அரசியல் வலதுசாரிகளுக்கு சாதகமான விதத்தில் செயல்படக்கூடிய ஒரு அபாயகரமான தூண்டுகோலாக மாறிவிடும்.

ஐரோப்பிய யூனியனை ஜனநாயகப்படுத்துவதற்கு ஆதரவான மற்றும் எதிரான இரண்டு நேரடியான மற்றும் வெளிப்படையான நிலைபாடுகளைத் தவிர மற்றொரு கருத்து ஓரளவுக்கு பரவலாக இருந்து வருகிறது. கிரீசில் நிகழ்ந்தவை மற்றொரு நாட்டில் மீண்டும் நிகழுமானால் என்ன செய்யவேண்டும் என்ற கேள்விக்குத் தெளிவான பதிலை அளிக்கத் தயங்குவோரையே இங்கு குறிப்பிடுகிறோம். சிரிசா உட்படுத்தப்பட்ட அதே அச்சுறுத்தலுக்கு பிற கட்சிகளும் கூட்டணி அரசாங்கங்களும் உட்படுத்தப்படலாம் என்று பலரும் கவலைப்படுகின்றனர். இதுதவிர, மற்றொரு பரவலான அச்சமும் இருந்துவருகிறது. ஐரோப்பிய மண்டலத்திலிருந்து விலகுவதைப் பற்றி அது சிந்தித்துப் பார்க்குமானால் அதனால் எற்படக்கூடிய பணவீக்கம், அதன்விளைவாகத் தொடரக்கூடிய பொருளாதார நிலையற்ற தன்மை மற்றும் கூலிவிகிதங்கள் மற்றும் ஓய்வூதியம் குறைக்கப்படுதல் போன்றவைகுறித்த அச்ச உணர்வினால் மக்கள் பிரிவின் பெரும்பகுதியினர் முதலாளித்துவ எதிர்ப்பு இடதுசாரிகளிடமிருந்து அந்நியப்படும் நிலை ஏற்படும் என்பதாகும். போர்த்துக்கல்லின் இடது கூட்டு மற்றும் நெதர்லாந்தின் சோஷலிஸட் கட்சி போன்றவை அண்மை ஆண்டுகளில் தமது நிலைபாடுகளை மாற்றிக் கொள்வதானது இந்த நிச்சயமற்ற தன்மைக்கான தனித்தன்மை வாய்ந்த உதாரணங்களாக இருக்கின்றன.

மெலங்கோனின் அண்மைக்கால வேண்டுகோளான ஐரோப்பாவுக்கான பிளான் B[37] என்பது முரண்பாடுகளும், புதிர்த்தன்மையும் கொண்டதாக இருந்தபோதிலும், அது விவாதங்களை மேலும் ஒரு தூண்டிவிட்டுள்ளது. கிரீஸ் நாட்டில் ஐரோப்பாவின் குறுக்கீடானது நடைமுறையில் ஒரு அதிரடியான ஆட்சி மாற்றம் என்று முத்திரை குத்தியுள்ள அது, தேவைப்படும்போது[38] யூரோ அடிப்படையிலான பணமுறைக்குக் கிடைக்கக்கூடிய ஒரு மாற்றுக்கான வழிமுறைகளைத் திட்டமிடுவதற்கு ஒரு நிரந்தர

சர்வதேச மாநாட்டைக் கூட்ட வேண்டும் என்ற ஆலோசனையை வழங்கியுள்ளது. வரக்கூடிய மாதங்களில் இந்தக் குறிக்கோளின் பின் சமூக சக்திகளும் அரசியல் கட்சிகளும் அறிவு ஜீவிகளும் கூட்டாக அணிதிரள்வார்கள் எனில், எதிர்காலத்தில் ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேறுவது என்ற கோரிக்கை ஜனரஞ் சக வலதுசாரிகளுடையதாக மட்டும் இல்லாமல் மேலும் அதிகமானவர்களின் முழக்கமாகவும் ஆகிவிடும்.

மறுபுறத்தில் சிரிசாவுக்குள் வெடித்துக் கிளம்பிய மோதல் வேறு ஒரு இடத்தில் மீண்டும் தோன்றலாம். பிரன்ட் டூ கவுச் மற்றும் டூ லிங்கேயை பாதித்து வரும் உள்ளக அதிர்வுகளில் இதன் அடையாளங்களை ஏற்கெனவே காண முடிகிறது. எனவே ஐரோப்பிய முற்போக்கு இடதுசாரிகளைப் பொறுத்தவரை பிரிவினைகள் தோன்றக்கூடிய ஒரு புதிய இடைவெளிக்கான அபாயமான ஒரு திட்டவட்ட வடிவத்தை எடுக்கக்கூடும். செயல்திட்ட வரையறை என்பதைக் கொண்டிராத போராளிசக்திகள் அண்மை ஆண்டுகளில் மேற்கொண்டுவரும் பன்முக வடிவங்களில் வரம்புகளை இது வெளிப்படுத்திவருகிறது. புதிய ஒழுங்கமைவுகளுக்கான உயிர் கொடுக்கின்ற அமைப்புகளின் மத்தியில் உள்ள அரசியல் நிலைபாடுகள் மற்றும் அரசியல் பண்பாடுகளின் வேறுபட்ட தன்மைக்கு பின்பற்றப்பட வேண்டிய வியூகம் - குறித்து-எட்டுவதற்குக் கடினமானதாக இருக்கக்கூடிய அந்த வியூகம் - ஆனால் சாத்தியமற்றதாக இல்லாத அந்த வியூகம் குறித்து உடன்பாடு தேவைப்படலாம்.

சமூக ஜனநாயக சக்திகளுடனான உறவுகள் தொடர்பாக ஐரோப்பிய முற்போக்கு இடதுசாரிகளுக்குள் பிற பதட்ட நிலைகள் இருந்துவருகின்றன. நகராட்சி மற்றும் பிராந்திய மட்டங்களில் தொடர்ந்து முன்னுக்கு வரும் முக்கிய பிரச்சனை யாதெனில், அவர்களுடன் அரசாங்க அனுபவத்தில் பங்கேற்பது நல்லதாக இருக்குமா என்பதாகும். அவ்வாறு பங்கேற்பதில் உள்ள அபாயம் யாதெனில், அவர்களுக்குக் கீழ்ப்பட்டு செயல்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம். கடந்த காலங்களைப் போல எதிர்மறையான, கீழ்நோக்கிச் செல்லும் சமரசங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். மக்கள் ஆதரவு மட்டத்தில் பெறப்பட்டுள்ள ஆதாயங்கள் அரிக்கப்படும் நிலை ஏற்படும். இது மலின அரசியல் வலதுசாரிகளுக்கு சமூக எதிர்க்கட்சி என்ற ஒரு ஏகபோகத்தன்மையை அளிப்பதாக இருக்கும்.

கடந்த பத்தாண்டுகளின் சிக்கன நடவடிக்கைகளுடன் ஒரு தெளிவான முறிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு பொருளாதார செயல்திட்டத்தை அமல்படுத்துவதற்கான நிலைகள் இருக்கும் என்றால் மட்டுமே அரசாங்கத்தில் பங்கேற்பதுகுறித்த

வாய்ப்பினை பரிசீலிக்கலாம். இது தவிர வேறு எந்த ஒரு முடிவு எடுக்கப்படும் என்றாலும் கடந்த காலத்திலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்றே பொருள்படும். அரசில் பங்கேற்ற சோஷலிஸ்டுகளின் தலைமையிலான மிதவாத நிர்வாகிகள், தொழிலாளி வர்க்கத்தினர், சமூக இயக்கங்கள் மற்றும் சமுதாயத்தின் மிகவும் பலவீனப் பிரிவினர் மத்தியில் உள்ள முற்போக்கு இடதுசாரிகளிடம் தமது நம்பகத்தன்மையை இழந்தனர் என்பதை நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும்.

வேலையின்மைப் பிரச்சனையானது யுத்தத்துக்குப் பிந்தைய காலத்தில் முன்னெப்போதும் எட்டப்படாத அளவை சில நாடுகளில் எட்டியுள்ளது. தொடர்ந்து நீடிக்கக்கூடிய வளர்ச்சியை தனது வழிகாட்டும் கொள்கையாகக் கொண்ட பொது முதலீட்டின் ஆதரவுடன் உழைப்பாளருக்கான ஒரு பேரவா நிரம்பிய திட்டத்தைத் துவக்குவது முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய ஒன்றாக ஆகியுள்ளது. சமீப காலத்திய அனைத்து உழைப்புச் சந்தை சீர்திருத்தங்களின் தனி அடையாளமாக உள்ள வேலைப்பாதுகாப்பின்மை தொடர்பான ஒரு திசைவழி மாற்றத்துடன் அது செல்ல வேண்டும். கூலி விகிதங்கள் ஒரு குறிப்பிட்ட மட்டத்துக்குக் கீழே வீழ்ச்சியடையக் கூடாது என்ற விதியடங்கிய சட்டமும் நிறைவேற்றப்படவேண்டும். இளைஞர்கள் தங்களுடைய எதிர்காலத்தைத் திட்டமிடுவதை இத்தகைய நடவடிக்கைகள் சாத்தியமாக்கும் நவீன தாராளமயத்தின்கீழ் சமத்துவமற்ற செல்வப் பகிர்மானத்துக்கு எதிரான நடவடிக்கையாகவும் சமூகநீதியின் சில கூறுகளை மீண்டும் கொண்டுவரும் விதத்திலும் தொழிலாளர்களின் வேலைநேரம் குறைப்பு ஓய்வுபெறும் வயதுக்குறைப்பு போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

பரபரப்பூட்டும் விதத்தில் அதிகரித்துள்ள வேலையின்மைப் பிரச்சனையை எதிர்கொள்வதற்கு குடிமக்கள் வருமானம், வசதியற்றவர்களுக்கு ஆதரவளிக்கும் அடிப்படை வடிவங்கள் போன்றவற்றை நோக்கிச் செல்கின்ற நடவடிக்கைகளை தீவிர இடதுசாரிக் கட்சிகள் ஊக்கப்படுத்த வேண்டும். வீட்டுவசதிக்கான உரிமை, போக்குவரத்துச் சலுகைகள், இலவசக்கல்வி போன்ற நலத்திட்டங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். இதனை வறுமை மற்றும் மேலும்மேலும் அதிகரிக்கும் சமூக விலக்கு இவற்றுக்கு எதிராகப் போராடும் விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

அதேநேரத்தில் கடந்தசில பத்தாண்டுகளில் எதிர்ப்புரட்சியின் அடையாளமாக அமைந்த தனியார் மய நடவடிக்கைகளைப் பின்னுக்கு தள்ளுவது இன்றியமையாதது. சமுதாயப் பணிகளிலிருந்து சிலருக்கு லாபத்தைத் தோற்றுவிக்கின்ற வழிமுறைகளாக முழுமாற்றம்

செய்ப்பட்ட அனைத்து பொதுச் சரக்குகளையும் பொதுவான உடைமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் மீண்டும் மாற்ற வேண்டும். ஜெரமி கோர்பினின் ஆலோசனையான பிரிட்டிஷ் தொடர்வண்டித்துறையை மீண்டும் தேசியமயமாக்குதல் மற்றும் ஐரோப்பாவின் அனைத்துப் பகுதிகளிலும் பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் குறிப்பிடத்தக்க நிதி ஆதாரங்களை முதலீடு செய்வது போன்றவை எடுக்க வேண்டிய சரியான திசை வழியை சுட்டிக்காட்டுகின்றன.

இத்தகைய சீர்திருத்தங்களுக்கான நிதித்தேவையை மூலதனத்தின் மீது பெரிய தொழில் நிறுவனங்களின் உற்பத்தி தொடர்பற்ற நடவக்கைகள் மற்றும் பணி கொடுக்கல் வாங்கல் மற்றும் வருமானத்தின் மீது வரி விதிப்பதன் மூலம் எதிர்கொள்ள முடியும். இந்த நோக்கத்திற்கான முதல் வழிமுறையாக நிதிநிர்வாகம் மற்றும் மும்மூர்த்திகளால் சுமத்தப்பட்ட விலங்குகளை ரத்து செய்வதற்கான பொது வாக்கெடுப்பை நடத்துவதாகும். இதற்காக எடுக்க வேண்டிய மற்றொரு நடவடிக்கை, அட்லாண்டிக் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கூட்டுக்கான அனுமதியை தடுத்து நிறுத்துவதாகும். ஏனெனில், அது நடைமுறைக்கு வந்தால் நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும்.[39]

பெருநிலப்பரப்பு மட்டத்தில் ஒரு விரிவான அரசியல் மற்றும் சமூக சக்திகளின் விரிவான கூட்டிணைப்பானது பொதுக் கடனை மறுகட்டமைப்பு செய்வதற்கான ஒரு ஐரோப்பிய மாநாட்டுக்காக போராடி வெற்றி பெற முடியும் என்றால்தான் ஒரு உண்மையான மாற்றை நினைத்துப்பார்க்க முடியும்.

முற்போக்கு இடதுசாரிகள் மேலும் அதிக உறுதியுடனும் விடாப்பிடியாகவும் பல்வேறுவிதமான அரசியல் இயக்கங்களையும் தேசம் கடந்த அணிதிரட்டல்களையும் வளர்த்தால்மட்டுமே இது நிகழ முடியும். இது யுத்தம் மற்றும் அயல்நாட்டினருக்கு எதிரான வெறிக்கூச்சலின் நிராகரிப்பு மற்றும் ஐரோப்பிய பெருநிலப்பரப்புக்கு வரக்கூடிய புலம்பெயர்வோருக்கு குடியுரிமை மற்றும் முழுமையான சமூக உரிமைகளை வழங்குவதற்கான ஆதரவு ஆகியவற்றுடன் இது தொடங்கப்படவேண்டும். 2015 நவம்பர் 13ந்தேதி பாரிசில் நடைபெற்ற தாக்குதல்களுக்குப் பிறகு இப்பிரச்சனை மேலும் தீர்மானகரமான பிரச்னையாக ஆகியுள்ளது.

ஒரு மாற்று அரசியலானது குறுக்கு வழிகள் எதனையும் அனுமதிப்பதில்லை. ஏனெனில், மக்களைக் கவர்ந்திழுக்கக்கூடிய தலைவர்களின் மீதான நம்பிக்கை மட்டும் போதாது. மாறாக இன்றைய கட்சிகளின் பலவீனமானது அரசு நிறுவனங்களால் அவர்கள் நிராரிக்கப்படுவதை நியாயப்படுத்தவில்லை.[40] புதிய அமைப்புகளைக்

கட்ட வேண்டியது இடதுசாரிகளுக்கு அவசியமாகியுள்ளது. 20ஆம் நூற்றாண்டில் தேவைப்பட்ட அதே விதத்தில் இவை இடதுசாரிகளுக்குத் தேவைப்படுகிறது. பணியிடங்களில் விரிவான அளவில் காணப்பட்டு வரும் அமைப்புகள்; தொழிலாளர்களையும் இடைநிலை வர்க்கங்களையும் போராட்டத்தில் ஒன்றுபடுத்த முயற்சிக்கும் அமைப்புகள் அதே சமயம்; இல்லை. மேலும் ஒருபோதும் சிதறுண்டுபோகாத ஒரு நேரத்தில்; வறுமை, சமூக ஒதுக்கல் ஆகியவற்றின் விளைவாக ஏற்படும் பரபரப்பான பிரச்சனைகளுக்கு உடனடியாக விடைகளை (பொது முன்னேற்றங்களுக்கான சட்டங்கள் இயற்றப்படுவதற்கு முன்னரே) வழங்கும் திறன்கொண்ட உள்ளூர் கட்டமைப்புகளைக் கொண்ட அமைப்புகள் ஆகிய இவை இடதுசாரிகளுக்குத் தேவைப்படுகின்றன. மற்ற வரலாற்று யுகங்களில் தொழிலாளர் இயக்கங்கள் நடைமுறைப்படுத்திய சமூக எதிர்ப்பு மற்றும் தோழமை நடவடிக்கைகளின் வடிவங்களிலிருந்து இடதுசாரிகள் மீண்டும் கற்றுக் கொள்வார்கள் என்றால் இது நிகழ்வதற்கு உதவிகரமாக இருக்கும்.

புதிய முன்னுரிமைகளை வரையறை செய்யும் தேவையும் ஏற்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக, ஒரு உண்மையான பாலின சமத்துவம் மற்றும் இளம் உறுப்பினர்களுக்கு முழுமையான அரசியல் பயிற்சி அளிப்பதைக் குறிப்பிடலாம். ஜனநாயகமானது தொழில்நுட்ப உயிரிகளின் பிணைக் கைதியாக இருக்கும் யுகத்தில் கீழணிகளைப் பங்கேற்கச் செய்வது மற்றும் சமூகப் போராட்டங்களின் வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஊக்கமளிப்பதே அத்தகைய பணிக்கான வழிகாட்டியாக இருக்கும்..

நிகழ்ச்சிப் போக்குகளை மாற்றுவதற்கு உண்மையில் விருப்பம் கொள்ளக்கூடிய தீவிர இடதுசாரிகளின் முன்முயற்சிகளுக்கான பாதையாக அவர்களின் முன்னே இருப்பது ஒரே பாதைதான்: மாஸ்டிரிச் உடன்பாட்டினால் துவக்கப்பட்ட கொள்கைகளுக்கு வெகுமக்களின் எதிர்ப்பினைத் தூண்டிவிடும் திறன்பெற்ற ஒரு புதிய சமூகக் கூட்டைக் கட்டுவது மற்றும் அதன்மூலம் இன்றைய ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்தும் பொருளாதார அணுகுமுறைகளை அவற்றின் வேரின் மட்டத்தில் மாற்றம் செய்வதுமாகும்.

(இத்தாலி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு பாட்ரிக் காமில்லரால் மொழியாக்கம் செய்யப்பட்டது)

அடிக்குறிப்புகள்

1) 1989ஆம் ஆண்டில் இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி (பிசிஐ, ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சி (பிசிஈ) கிரேக்க இடதுசாரிகள் (ஈஏஆர்) மற்றும் டென்மார்க்கைச் சேர்ந்த சோஷலிச மக்கள் கட்சி (எஸ்எஃப்) ஆகியவை ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் 'ஐரோப்பிய ஒன்றுபட்ட இடதுசாரிகள்' என்ற குழுவை அமைத்திருந்தனர்.

2) 1989ஆம் ஆண்டுமுதல் பிரெஞ்ச் கம்யூனிஸ்ட் கட்சி (பிசிஎஃப்) போர்த்துகீசிய கம்யூனிஸ்ட் கட்சி (பிசிபி) கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சி (கேகேஈ) மற்றும் அயர்லாந்தின் தொழிலாளர் கட்சி ஆகியவை 'ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் இடதுசாரி ஒற்றுமைக்குழு' என்ற குழுவை அமைத்திருந்தனர்.

3) தேர்தல் களத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க அமைப்பாக இருந்தது, பிரான்சைச் சேர்ந்த ஒர்க்கர்ஸ் ஸ்டிரகிள் (எல்.ஓ) கட்சி ஆகும்.

4) தொழிலாளர்களின் வேலை வாரத்தை 35 மணி நேரங்களாகக் குறைத்த பிரான்ஸ் நாட்டின் லயனல் ஓஸ்பின் அரசாங்கம் இந்தப் போக்கிலிருந்து விதிவிலக்காக இருந்தது. ஸ்பெயின் நாட்டில் ஜபாதிரோ அரசாங்கமும் பிற ஐரோப்பிய நாடுகளைப் போல அதே நவீன தாராளமயக் கொள்கைகளைப் பின்பற்றியது. பொருளாதார நெருக்கடியின் விளைவுகளால் அது துடைத்து எறியப்பட்டது. எனினும் குடிமை உரிமைகள் தொடர்பாக அது பெரும் எண்ணிக்கையிலான முக்கிய சீர்திருத்தங்களை நிறைவேற்றியது. ஐரோப்பாவின் சமூக ஜனநாயகப் போக்குகள் குறித்த முழுமையான ஆய்வுக்கு ஜீன்-மிக்கெல் டி வாலி பேஃபியன் எஸ்கலோன், மாத்திய வீரா மற்றும் The Palgrave Handbook of Social Democracy in the European Union - Basing stoke : Palgrave Macmillan 2013 ஆகியவற்றைக் காண்க.

5) See Anthony Blair and Gerhard Schroder, Europe The Third way - Die New milte London/ Berlin Labour party SPD 1999

6) 2015 அக்டோபர் 18ந்தேதியன்று பழமைவாதிகளின் இதழான மெயில் ஆன் சன்டே 28.3.2002 தேதியிட்ட (ஈராக் யுத்தத்துக்கு ஓராண்டுக்கு முன்னர்) ஒரு ரகசிய ஆவணத்தை (Secret/

noforn) வெளியிட்டது. நெருக்கடிக்கு ராஜீய தீர்வு காண முயற்சிக்கப்போவதாக ஒருபுறம் பகிரங்கமாக அறிவித்த பிரிட்டிஷ் பிரதமர் மறுபுறத்தில் சதாம் உசேன் பேரழிவு ஆயுதங்களை வைத்திருந்தாக உலக மக்கள் கருத்தை ஏற்படுத்துவதற்கு புஷ்சுக்கு ஆதரவளித்துள்ளார் என்பதை இந்த ஆவணம் உறுதிப்படுத்துகிறது. அமெரிக்காவினால் ஏவப்பட்ட – மேலும் பொதுவாக நீடித்த சுதந்திரத்துக்கான இயக்கம் குறித்து அறிந்து கொள்வதற்கு http:/www.dailymail.co uk/news/article 3277402/smoking gun emails-reveal -Blairs - deal blood. George bush-Iraq war-forge-year-convasion-started. html/ ஆகியவற்றைக் காண்க.

7) இக்கட்சி நார்டிக் கிரீன் லெஃப்ட் கட்சியுடன் மட்டுமே சேர்ந்தது. ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் ஐரோப்பிய ஒன்றுபட்ட இடதுசாரி/நார்டிக் கிரீன் லெஃப்ட் குழுவுடன் இது சேரவில்லை.

8) இடதுசாரிக் கட்சி (Die Linke) ஜெர்மனியில் இதே போன்றதொரு முடிவை எடுத்தது. பிராண்டன் பர்க் அரசில் சமூக ஜனநாயகவாதிகளுடன் அரசாங்கத்தில் நுழைந்தது (அங்கே இக்கட்சியின் வாக்கு சதவீதம் 2009ல் 27.2 சதமாக இருந்து 2014ல் 18.6 சதமாக வீழ்ச்சியடைந்தது. பெர்லினில் (2001ல் 22.6 சதமாக இருந்த வாக்கு சதவீதம் 2011ல் 11.6 என்ற அளவுக்கு சரிபாதியாகக் குறைந்தது.) நெதர்லாந்து நாட்டில் உள்ள 12 மாகாணங்களில் 6 மாகாணங்களின் அரசாங்கங்களில் சோஷலிஸ்ட் கட்சி சேர்ந்தது. சிலநேர்வுகளில் மைய வலதுசாரிக் கட்சிகளின் அரசாங்கங்களாகக்கூட அவை இருந்தன. அதேநேரத்தில் சோஷலிஸட் இன்டர்நேஷனலுடன் இணைப்பினைக் கொண்டிருந்த லேபர் கட்சியானது எதிர்க்கட்சியாகவே தொடர்ந்து செயல்பட்டு வந்தது.

9) டென்மார்க்கில் 2007ஆம் ஆண்டில் சோஷலிச மக்கள் கட்சி 13 சதம் வாக்குகளைப் பெற்றிருந்து. பின்னர் அரசாங்கத்துக்கு ஆதரவான ஒரு சிறிய அரசியல் திருப்பத்தை அடுத்து தற்போதைய வாக்கு சதமான 4.2க்கு வீழ்ச்சியடைந்தது. அது ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் யூரோப்பியன் யுனைடட் லெஃப்ட் குழுவிலிருந்து ஐரோப்பிய பசுமைக் குழுவுக்கு மாறியிருந்தது. அந்நேரத்தில் இந்த வீழ்ச்சியை எதிர்கொண்டது. இந்தக் குழுமாறலுக்கு 2008ல் நடைபெற்ற அக்கட்சியின் தேசிய மாநாடு அனுமதி வழங்கியிருந்தது.

10) லாட்வியா 2014, ஜனவரி 1 முதல் யூரோவை தனது செலாவணியாக ஆக்கியுள்ளது.

11) 2010ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 20 வயதிலிருந்து 40 வயது வரையிலானவர்கள் குறைந்த பட்சமாக 2 லட்சம்பேர் நாட்டைவிட்டு வெளியேறியதாக போர்த்துக்கீசிய தேசிய புள்ளிவிபரக் கழகம் கணக்கிட்டுள்ளது. 2008முதல் 2013 வரையிலான காலத்தில் புலம் பெயர்ந்த இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சமாக 1,33,000 ஆக இருக்கும் என்று ஸ்பெயின் நாட்டின் தேசிய புள்ளி விபரக்கழகம் கணக்கிட்டுள்ளது. 2010 முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் இத்தாலியிலிருந்து குறைந்தபட்சமாக 136000 இளம் வயதினர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. உண்மையில் இந்த புள்ளி விபரங்கள் எல்லாம் உண்மையான எண்ணிக்கையைவிடக் குறைவானவையே. கிரீஸ் நாடு தொடர்பாக அதிகாரபூர்வ புள்ளிவிபரங்களே இல்லை. காரணம், இளம்வயதினரின் புலம் பெயர்தலை அந்த நாட்டின் புள்ளி விபரக்கழகம் பதிவு செய்வதே கிடையாது.

12) 2006ஆம் ஆண்டில் அமெரிக்க முதலீட்டாளரும் பெருந்தனக்காரருமான வார்ரன் பஃப்ஃபட் ஒரு பேட்டியில் தனது பேச்சாற்றலை வெளிப்படுத்தும் விதத்தில் பின்வருமாறு கூறியுள்ளார். 'வர்க்கப் போராட்டம் நடைபெறுகிறது. சரிதான். ஆனால் எனது வர்க்கம், பணக்கார வர்க்கம்தான் அந்தப் போரை நடத்துகிறது. நாங்கள் வெற்றிபெற்று வருகிறோம்' See Ben Stein, 'In class Warfare, Guess which class in winning, New York Times 26-th November 2006.'

13) முதலாளித்துவத்துக்கும் ஜனநாயகத்துக்குமிடையேயான உறவு- எந்தவொரு தலைப்பின் மீது விரிவான அளவிலான எழுத்தோவியங்கள் அண்மை ஆண்டுகளில் தோன்றியுள்ளதோ அது குறித்து See Ellen Meiksins Wood, Democracy Against Capitalism - London; Cambridge University Press 1995.

14) இதுகுறித்த உடன்பாடு ஸ்பெயின் மற்றும் லக்சம்பர்க்கில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்தில் நிராகரிக்கப்பட்டதையடுத்து இந்த உடன்பாடு முடக்கப்படும் நிலையை அடைந்தது.

15) கிரீஸ் நாட்டில் 2015 ஜூலை மாதத்தில் சிப்பிராஸ் அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஆலோசனைக்கான பொதுஜன வாக்கெடுப்பில்

பிரஸ்ஸல்சின் குறிப்பிட்ட கொள்கைகளுக்கு அதிரடியான 'வேண்டாம்' என்ற முடிவு வழங்கப்பட்டது.

16) லக்சம்பர்க்கின் பிரதமர் என்ற விதத்தில் ஜங்கர் தனது நாட்டில் ஒரு சிறப்பு வரி விதிப்புமுறையை 300க்கும் மேற்பட்ட பன்னாட்டு நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு வழி வகுத்தார்.

17) எனினும் பிரான்ஸ் நாட்டின் மேலும் முக்கியத்துவம் வாய்ந்த அதிபர் தேர்தலில் வாக்களிப்போரின் பங்கேற்பு மிகவும் அதிகமாக இருந்த 2012 தேர்தல் 79.4 சதம் பேர் வாக்களித்தனர் என்பதைக் காணமுடிகிறது.

18) கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த பல நாடுகளில் தேர்தல்களில் பங்கேற்போர் எண்ணிக்கை மிகக் குறைவான அளவிலேயே இருந்தது. ஸ்லோவேகியாவில் 13 சதத்தினரும் செக் குடியரசில் 18.2 சதத்தினரும், ஸ்லோவேனியாவில் 24.5 சதத்தினரும், குரோஷியாவில் 25.2 சதத்தினரும், ஹங்கேரியில் 289 சதத்தினருமே தேர்தல்களில் வாக்களித்துள்ளனர். போர்த்துக்கல்லின் வாக்கு சதவீதமான 33.6 சதமும் இங்கிலாந்தின் வாக்கு சதவீதமான 35.6 குறிப்பிடத்தக்கவை. See http://www.europa europe.eu/pdf/election results/review:pdf.

19) 2014ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெற்ற நகராட்சித் தேர்தல்களுக்குப் பிறகு,

20) 'பிரெஞ்சுக்காரர்களுக்கே முன்னுரிமை' என்பதே ஜூன் மாரி லி பென் முன்னர் எழுப்பிய குறுகிய தேசீய வெறிக் கோரிக்கை See his Less Francais d'abord, Paris: cartere Michel Lafon 1984.

21) 2012 ஆம் ஆண்டு தேர்தல்களிலிருந்து ஃபிரன்ட் நேஷனல் கட்சியானது ஒரு விரிவான கூட்டணியின் பகுதியாக செயல்பட்டது அது அப்போது 'நேவி புளூ ராலி' என்று தன்னை அழைத்துக் கொண்டது (Rassem blement Blu Marine-RBM)

22) ஐரோப்பாவின் தீவிர வலதுசாரி சக்திகள்பற்றி பரிசீலனைக்கு See the volume edited by Andrea Mammone, Emmanual Godin and Brain Jenkins: Mapping the Extreme Right in Contemporary Europe London: Routledge 2012.

23) 2004 முதல் 2008 வரை இயங்கிய ஸ்பெயின் நாட்டு அரசாங்கம் தொடர்பாக இஸ்க் வீர்டா யுனிடாவின் நிலைபாட்டில் காணப்பட்ட ஊசலாட்டங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டாலும்கூட இதுதான் உண்மை நிலையாகும்.

24) ஐரோப்பிய இடதுசாரிக் கட்சியில்அடங்கியுள்ள அமைப்புகளின் ஒரு பட்டியலுக்கு http://www.european-left.org/about-el/member parties காண்க.

25) எனினும் 2013 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட ஒரு கூட்டணியான இனிஷியேடிவ் ஆஃப் கம்யூனிஸ்ட் அண்டு ஒர்க்கர்ஸ் பார்ட்டிஸில் பங்கேற்கும் அமைப்புகளை உள்ளடக்கியதாக இக்குழு இருக்கவில்லை. கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியைத் தவிர இதன் உறுப்புகளாக இருப்பவை 90 சிறுசிறு ஆச்சார ஸ்டாலினிஸ்ட் கட்சிகள்

26) ஆஸ்கர் லாஃபோன்டெய்னின் கார்ட்டல் லேபர் அண்ட் சோஷியல் ஜஸ்டிஸ்- தேர்தல் மாற்று (WASG) 2005 ஆம் ஆண்டில் உருவாயிற்று. பிரான்சில் ஜூன்-லுக் மெலன் கோன் தலைமையின் கீழ் Parti-de Gauche(PG-சிகப்புக் கட்சி) அமைக்கப்படுவது 2008 நவம்பரில் அறிவிக்கப்பட்டது. (அதை அமைப்பதற்கான மாநாடு 2009 பிப்ரவரியில் நடைபெறுகிறது)

27) 2015 ஜூனில் நடைபெற்ற தேர்தல்களில் அதிபர் ரெசெப் எர்டோகனால் தூண்டிவிடப்பட்ட தொடர் வன்முறை மற்றும் படுகொலைகளுக்கு முன்னால் எச்டிபி கட்சியானது வாக்குகளில் ஒரு கூடுதலான பங்கினை (13.1 சதம்) பெற்றிருந்தது.

28) ஐரோப்பிய இடதுசாரிகள் குறித்த ஒரு வரைபடத்துக்கு See Birgit Daiber, Cornelin Hilder brandt, Anna Strienthorist (eds) From Revolution to Coalition. Radical Left Parties in Europe, Berlin: Rosa Luxcemberg Foundation 2012 and more recentey the special issue of Socialism and Democrasy (vol 29/3 2015) edited by Babak Amini: The Radical Left in Europe

29) மற்றொரு ஒரே உதாரணமாக சைப்ரஸ் அரசினைக் குறிப்பிடலாம். அங்கே உழைக்கும் மக்களின் முற்போக்குக் கட்சி (AKEL) யானது 2009 ஆம் ஆண்டில் ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைத்துள்ளது.

30) தேர்தல் முடிவுகள் பற்றி சுற்றுக்குவிடப்பட்டுள்ள விபரங்களின் (ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட விபரங்களும் இதில் அடங்கும்) தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் சதவீதத்தையே குறிப்பிடுகின்றன. பெற்ற வாக்குகளின் சதவீதத்தை அல்ல. இந்த நடைமுறைக்கு போற்றத்தக்க விதி விலக்குகளில் ஒன்றாக இருப்பது பாவ்லோ சியோக் செட்டியாகும். The Rodical Left at the 2014 European Parliament Election: A first assessment in the online Parliament election; A first Assessment in the online publication editedby Cornelia Hilderbrandt: Situation on the Left in Europe

After the EU Elections: New Challenges, Berlin; Rosa Luxcemberg Stifling 2014

31) இத்துடன் கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மற்ற இரண்டு யூரோ நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவர்கள் ஈயூஎல்/என்ஜிஎல் குழுவைச் சேர்ந்தவர்கள் அல்ல.

32) EUL/NGL குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் அடங்கிய 28 நாடுகளில் பாதியளவு நாடுகளிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

33) "இதற்கு மாற்றே இல்லை" என்ற மார்க்கரெட் தாட்சரின் புகழ்மிக்க முழக்கமானது 30 ஆண்டுகளுக்குப் பின்னரும் ஒரு வேதாளம் போல தொடர்ந்து நீடித்து வருகிறது.

34) கிரேக்க நாடாளுமன்றத்தின் முந்தைய அதிபரான ஜோ கான்ஸ்டான்டோபே லோவின் முன் முயற்சியில் 2015 ஏப்ரல் மாதம் 4ந்தேதி அமைக்கப்பட்ட பொதுக்கடன் குறித்த உண்மைக் குழுவினால் பதிப்பிக்கப்பட்ட கூட்டு முதல் அறிக்கையினைக் காண்க http://cadtim.org/IMG/pdf/Report.pdf ஒரு சிலவாரங்களுக்கு முன்னர் இந்த முக்கிய ஆவணத்தை கிரேக்க நாடாளுமன்றத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்திலிருந்து விலக்குவதற்கு சிப்பிராஸ் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

35) 1970களில் போர்த்துக்கல் நாடானது கார்னேஷன் புரட்சி மற்றும் குடியரசு அமைக்கப்பட்டதற்குப் பிறகு சோஷலிஸ்ட் கட்சி தங்களைவிட இடதுசாரிகளாக உள்ள அரசியல் சக்திகளுடன் ஒரு போதும் பேச்சுவார்த்தை நடத்தியது கிடையாது.

36) சிலகாலமாகவே இதனை வாதிட்டு வருபவர்கள் உதாரணமாக ஜாக் சபீர், Fault-il sorter de l'Euro? பாரிஸ் லெ சியுல் 2012 மற்றும் Heiner Flassbeck and Costas Lapavitsas, Against the Troika; Crises and Austerity in the Eurozone London: Verso 2015- போன்ற நூலாசிரியர்களைத் தவிர இந்த திசை வழியில் புதிதாகக் கருத்து வெளியிடுபவர்களும் உண்டு. புகழ்பெற்ற ஜெர்மன் வார இதழான Der spiegal இல் Krise in Griechenland: என்ற தலைப்பில் வழங்கப்பட்டுள்ள நேர்காணலில் Lafontine fordert Ende des Euro (ஜூலை 11,2015) இந்த நேர்காணலில் சுற்றிவளைக்காமல் நேரடியாக ஐரோப்பிய யூனியன் தோல்வியடைந்துவிட்டது என்று ஆஸ்கார் லா போன்டைன் குறிப்பிட்டுள்ளார். இத்தாலியில் அண்மையில் மறைந்த சமூகவியலாளரான லூசியானோ கல்லினோ ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளார். அதில் ஐரோப்பிய

யூனியனிலிருந்து ஏன் இத்தாலி வெளியேற முடியும்; வெளியேற வேண்டும் என்பதை விளக்கியுள்ளார். Perche l'italia puo e deve uscire dale euro La Raphlb lica 22 செப்டம்பர் 2015. போர்த்துக்கல் நாட்டின் செல்வாக்கு மிக்கவரான பிரான்சிஸ்கோ லொவ்கா கிரேக்க நெருக்கடி வெடித்துக் கிளம்புவதற்கு முன்னரே மேலும் மேலும் கூடுதலான விமரிசனத் தன்மையுடன் கருத்துக்களை எழுதிவருகிறார். இவர் இடதுசாரிக் குழுவின் முக்கிய தலைவராக பத்தாண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறார். See his Volume together with Joao Fereira do Amaral: A Solucao Novo Escuds; Alfragide: Lna de Papel 2014, and more recently his article 'sair ou nao sair do euro', Publico 27. Februray 2015

37) கையெழுத்திட்ட மற்றவர்கள் ஆஸ்கார் லே போன்டைன் முன்னாள் கிரேக்க நிதி அமைச்சரான, யானிஸ் வனராவ் பகிஸ், ஜோ கான்ஸ்டான்டோ போவல் மற்றும் இத்தாலிய பொருளாதார வல்லுநரான ஸ்டிபானோ ஃபாஸ்சினா

38) இப்பொருள் குறித்த முதல் கூட்டம் 2016 ஜனவரி 23, 24 தேதிகளில் நடைபெற்றது. பங்கேற்பு மற்றும் விவாதத்தின் தரம் ஆகிய இரண்டுமே ஏமாற்றமளிப்பதாக உள்ளது.

39) இதில் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது 2015 அக்டோபர் 10ந்தேதியன்று பெர்லினில் நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டம் ஆகும். இந்த வர்த்தக ஒப்பந்தத்துக்கு எதிராக 250000 பேர் அணி திரண்டனர்.

40) 2015 ஜனவரியில் சிரிசா பதவிக்கு வந்தபோது அது பெற்ற வாக்குகள் 22,50,000. ஆனால் அதன் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 36000க்கு மேல் இல்லை. அது அரசாங்கப் பொறுப்பை ஏற்றபிறகு கிரேக்கக் கட்சியினால் ஜனநாயக ரீதியாக எடுக்கப்பட்ட முடிவுகள் மீண்டும்மீண்டும் தூக்கி எறியப்பட்டன அல்லது புறக்கணிக்கப்பட்டன.

■

வரலாற்று நூல்கள்

17389	அமெரிக்கா கருப்பின மக்களின் வரலாறு |ஆர். பெரியசாமி	90
17084	நீலக்குறிப்பேடு | தமிழில்:பி.சிவகாமி சுந்தரி	90
10079	இந்திய வரலாறு | இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட்	90
15778	நேரு வழக்குகள் | ஞாலன் சுப்பிரமணியன்	90
27078	பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள் 1848-1850 காரல்மார்க்ஸ்	95
17094	மே தினத் தியாகிகளின் மகத்தான வரலாறு தமிழில்: ச.சுப்பாராவ்	100
10874	ஜிந்தாபாத் ஜிந்தாபாத் | ச.தமிழ்ச்செல்வன்	110
17148	தெலுங்கானா மக்களின் ஆயுதப் போராட்டம் (1946-1951)| பி.சுந்தரய்யா | தமிழில்:என்.ராமகிருஷ்ணன்	20
15904	கியூபா புரட்சிகர யுத்தத்தின் நினைவுகள் சே குவேரா	180
17045	பண்டைக்கால இந்தியா | டி.என்.ஜா	140
27142	தமிழகத்தில் காலனியமும் வேளாண்குடிகளும் கே. காளிமுத்து	160
17196	மார்க்ஸ்-எங்கெல்ஸ் வாழ்வும் எழுத்தும் ஓர் அறிமுகம் டேவிட் ரியாஜெனோவ் | தமிழில்: அபராஜிதன்	160
10617	மக்கள் நாட்குறிப்பில் சுதந்திரப்போராட்டம் தொகுப்பு: சீத்தாராம் யெச்சூரி	180
16994	சே-பிடல் புரட்சிகர நட்பு | தமிழில்: ச.சுப்பாராவ்	180
10077	இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாறு	180
17234	ஒரு பொருளதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம் ஜான் பெர்க்கின்ஸ் | தமிழில்: இரா.முருகவேள்	203
15623	அமெரிக்கப் பேரரசின் ரகசிய வரலாறு ஜான் பெர்க்கின்ஸ் | தமிழில்: அசோகன் முத்துச்சாமி	250
17067	காலனியம் | பிபன் சந்திரா தமிழில்: அசோகன் முத்துசாமி	290
13643	இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாறு | அருணன்	480
10615	அரசு ஊழியர் வரலாற்றில் | எம்.ஆர்.அப்பன்	300
10078	காந்திஜியின் இறுதி 200 நாட்கள் | வி.ராமமூர்த்தி	550
17046	பெண்: வரலாறும் விடுதலைக்கான போராட்டமும் பி.எஸ்.சந்திரபாபு, திலகவதி	395
17068	இந்தியாவில் பொருளாதார தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் | பிபன் சந்திரா | தமிழில்: ச.சுப்பாராவ்	490